Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 22 திங்கட்கிழமை (07.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 42

www.uthayan.com

# போர் நிறுத்தத்தை நிராகரித்து அரசு சர்வதேச வெறுப்பைத் தேடியுள்ளது

## கடுமையாகக் கண்டிக்கிறது ஐ.தே.க.

கொழும்பு,ஜனவரி 07

போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறும் பொறுப்பை ஒருதலைப்பட்சமாகத் தனது தோளில் போட்டுக்கொண்டிருப்பதன் மூலம் இலங்கைக்கு எஞ்சியிருப்பது சர்வதேச வெறுப்பாகும். - இவ்வாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, இலங்கை அரசின் முடிவை கடும் விசனத்துடன் கண்டித்திருக்கின்றது.

போர் நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவது என்ற இலங்கை அரசின் தீர்மானம் குறித்து ஐ.தே.கட்சி நேற்று விடுத்த விசேட செய்திக் குறிப்பிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதில் அக்கட்சி மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

போர்நிறுத்த உடன்படிக்கை ரத்துச் செய்யப்படும் என மக்கள் முன் வாக்குறுதி வழங்கி 2005 நவம்பரில் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசு 2006 பெப்ரவரியில் ஜெனிவா நகரில் நடந்த பேச்சுகளின்போது போர்நிறுத்த உடன்பாட்டைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதாக எழுத்துமூலம் உறுதி செய்தது.

பின்னர் 2006 ஒக்டோபர் மாதத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் கையொப்பமிட்டு, போர்நிறுத்த உடன்படிக்கையில் குறிப்பிட்ட 'அரசியல் தீர்வு' தொடர்பாக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் அரசு உறுதியளித்தது. (11ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் நேற்று வழிமறிப்புச் சோதனை

தலைநகர் கொழும்பு உட்பட மேல் மாகாணத்தில் பல பகுதிகளிலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாளில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து கடும் தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இத் தேடுதல் வேட்டையின்போது பல வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்பட்டன. தலைநகரில் பல இடங்களிலும் வாகனங்கள் நீண்ட வரிசையில் வழிமறிக்கப்பட்டு அவற்றில் பயணித்தோர் துருவித்துருவி விசாரிக்கப்பட்டனர். (உ)

## புலிகளின் மீதான தடை இன்னும் சில தினங்களில்?

கொழும்பு,ஜன.07

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொண்ட அரசு இன்னும் சில தினங்களில் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதற்கும் தீர்மானித்துள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழ் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டது.

அரசு ஏற்கனவே புலிகள் இயக்கத்தைத் தடைசெய்வதற்குத் தேவையான அடிப்படைச் சட்ட நகல்களைத் தயார்செய்து சட்டத்தரப்புகளின் ஆலோசனைகளைப் பெற்றுள்ளதாகவும் அறியக்கிடைக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்திலும் புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டிருந்த போதிலும், 2001 இல் ஆட்சிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க அரசினால் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு முன் 2002 செப்டெம்பர் மாதம் 3 ஆம் திகதி அத் தடை நீக்கப்பட்டது. (12ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் ஒரு தலைப்பட்ச முடிவு குறித்து இணைத்தலைமை இவ்வாரம் ஆராயும்

கொழும்பு, ஜன. 07

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து அரசாங்கம் ஒரு தலைப்பட்சமாக விலகியமை குறித்து ஆராய்வதற்காக இணைத்தலைமை நாடுகள் இந்த வாரத்தில் கூடவுள்ளன.

போர் நிறுத்த உடன்படிக்கை உத்தியோக பூர்வமாக செயலிழக்கும் ஜனவரி 16 ஆம் திகதிக்குப் பின்னர் உருவாகக்கூடிய சூழ்நிலை குறித்து இணைத்தலைமைகள் ஆராயும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இணைத்தலைமையில் அங்கம் வகிக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதியான பிரிட்டன் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கைக்கு எதிராக சமீபத்தில் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டன் இலங்கைக்கான புதிய நிதியுதவிகளை நிறுத்தியுள்ள அதேவேளை அமெரிக்கா இராணுவ உதவிகளை இடைநிறுத்தியுள்ளது. (அ-உ)

## மன்மோகன்சிங் இலங்கை வரமாட்டார் புதுடில்லி முடிவு கொழும்புக்கு அறிவிப்பு

கொழும்பு, ஜன. 07

இலங்கையின் அறுபதாவது சுதந்திர தின கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்க முடியாத நிலையில் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் உள்ளார் என இலங்கைக்கு இந்தியா உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இலங்கைக்கு பெப்ரவரி நான்காம் திகதி விஜயம் மேற்கொள்வதற்கு பிரதமர் மன் (12ஆம் பக்கம் பார்க்க)

## கொட்டடிப் பகுதியில் குண்டுவெடிப்பு இரு இளைஞர்கள் பலி; 2 படையினர் காயம்

யாழ்ப்பாணம், ஜன. 07

கொட்டடியில் கடற்கரை ஓரமாகவுள்ள வீடு ஒன்றில் நேற்று நண்பகல் ஒரு மணியளவில் குண்டு ஒன்று வெடித்துள்ளது. அதன்போது இரு இளைஞர்கள் பலியானார்கள்; படையினர் இருவர் காயமடைந்தனர்.

கொட்டடியில் உள்ள வீடு ஒன்றைப் படையினர் சுற்றிவளைத்தபோது, அங்கு தங்கியிருந்த இரு இளைஞர்கள் தாங்கள் வைத்திருந்த தற்கொலைத் தாக்குதல் குண்டை வெடிக்க வைத்து உயிரிழந்தனர் என்று படையினர் தெரிவித்தனர்.

யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா (12ஆம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினையில் சர்வதேசம் அக்கறை கொள்ள புலிகள் இராணுவ பலத்தை வெளிப்படுத்தவேண்டும்

### மூத்த உறுப்பினர் பாலகுமார் கருத்து

கொழும்பு, ஜன. 07

இலங்கை அரசுக்கு எதிரான இராணுவத் தாக்குதல்களை வீச்சுடன் அதிகரிக்கப்போவதாக விடுதலைப் புலிகள் சாடை காட்டியிருப்பதாக பி.ரி.ஐ. செய்தி நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் வே.பாலகுமாரன் தமிழீழ தேசிய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் மேற்படி விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது என்றும் அந்தச் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்தியாவும் ஏனைய சர்வதேச நாடுகளிலும் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக உரிய நிலைப்பாட்டை தீர்க்கமாக மேற்கொள்வதில் முடிவெடுக்க முடியாதனவாகவே காணப்படுகின்றன-

விடுதலைப் புலிகள் தமது உண்மையான இராணுவ பலத்தை நிரூபித்துக் காட்டினாலேயே, சர்வதேசத்துக்கு நிலைமை மிகத் (12ஆம் பக்கம் பார்க்க)

## ராஜாப்டீன் நாளை எம்.பியாகபதவியேற்பு

கொழும்பு,ஜன.07

தலைநகரில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட மகேஸ்வரன் எம்.பியின் இடத்துக்கு ஐ.தே.கட்சியின் பட்டியலில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட்டு அடுத்த நிலையிலுள்ள சபீக் ராஜாப்டீன் எம்.பியாகின்றார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைதான பல்கலை மாணவனை விடுவிக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 07

யாழ். பல்கலைக்கழக பௌதீகவியல் துறை இறுதிவருட மாணவனான பொ.மயூரனை காலம் தாழ்த்தாது உடன் விடுவிக்க வேண்டும் என்று விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியம் கோரியுள்ளது.

இது தொடர்பாக ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாந்தமான குணமும் அமைதியான போக்கினையும் கொண்ட இந்த மாணவன் மிகவும் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த காலம் (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பாளரும் மற்றும் மூவரும் உயிரிழப்பு

### கிளைமோரா, துப்பாக்கிச் சூடா காரணம் என்பதில் முரண்பாடு

கொழும்பு,ஜன.07

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான மன்னார், பாலமடுப்பகுதியில் இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணி நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் சிக்கி புலிகளின் இராணுவப் புலனாய்வுத் துறையின் தலைவர் கேணல் சார்ள்ஸ் கொல்லப்பட்டார் என அறிவிக்கப்படுகின்றது.

இவருடன் வானில் பயணித்துக்கொண்டிருந்த லெப்டினனட் தர புலிகள் மூவரும் (12ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எம்மை விட்டுப் பிரிந்து செ[illegible] எங்கள் ஆ[illegible]யத் தெய்வம்

## சிவகணேசக்குருக்கள் கணேசராஜசர்மா



இறைபதம் அடைந்த செய்தி கேட்[illegible]ன் ஓடோடி வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசி மூலமும், தந்தி மூலமும் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், அன்னாரின் இறுதிச் சடங்குகளுக்குப் பண உதவி புரிந்தவர்களுக்கும் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் அதற்கு வேண்டிய அனைத்து ஒத்துழைப்புகளை நல்கியோருக்கும், அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் பங்குபற்றி சிறப்பித்த சகல அன்புள்ளங்களுக்கும் மேலும் மிகவும் வேலைப்பழுவாக இருந்த போதும் எமது வேண்டுகோளை ஏற்று அழகிய முறையில் அமரரின் நினைவு வெளியீட்டினை உருவாக்க உதவி புரிந்த நா.பா.ரூபன் சுவாமி அவர்களுக்கும் இந் நினைவு வெளியீட்டினை ஆக்கித் தந்த கொக்குவிலைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ இ.வெங்கடேச ஐயர் அவர்களுக்கும் இதனை மிக அழகாகவும் விரைவாகவும் கணனிமயப்படுத்திய கொக்குவில் யந்திரசாலை பிறிண்டேர்ஸினருக்கும் அன்னாருக்கு கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எங்கள் உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

75/10,செட்டித் தெரு, நல்லூர். சிவகணேசக்குருக்கள் குடும்பம்.


# மரண அறிவித்தல்கள்

## சின்னப்பு நடராசா (சின்னத்தம்பி) ஆசாரி

நயினாதீவு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சின்னப்பு நடராசா ஆசாரி நேற்று (06.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் தங்கமுத்துவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற அருட்செல்வனின் அன்புத் தந்தையும் சிவபாக்கியம், காலஞ்சென்ற நாகரத்தினம் (ராசு ஆசாரி), கார்த்திகேசு ஆசாரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரஞ்சினிதேவியின் அன்பு மாமனாரும் சௌமித்தியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (07.01.2008) திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடை பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் நயினாதீவு சல்லிப்பரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

காளிகோயிலடி, 5ஆம் வட்டாரம், நயினாதீவு.

தகவல்: சி.கார்த்திகேசு (சகோதரன்).

## செல்வி ஞானரட்ணம் தம்பியப்பு

வசாவிளான் உத்தரியமாதா கோவிலடியைப் பிறப்பிடமாகவும், தற்போது ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி ஞானரத்தினம் தம்பியப்பு நேற்று (06.01.2008) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பியப்பு-மரியப்பிள்ளை தம்பதியினரின் புதல்வியும், நீக்கலஸ், சிசிலியம்மா, மரியஞானேந்திரன், மரியநாயகம், புனிதசீலி, ஜேசேப் நவரெட்ணம், அன்ரன் நவரட்ணம் சன்றாலூட்ஸ் ஆகியோரின் சகோதரியும், இராஜேஸ்வரி, காலஞ்சென்ற சபாநாயகம், மரியராணி, தேவரட்ணம், யோன்விக்ரர், ஜெசிந்தா, ரொகானி, செல்வநாயகம் ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (06.01.2008) ஞாயிற்றுக் கிழமை பி.ப 3 மணிக்கு ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் வழிபாட்டுடன் ஏழாலை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப் பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை கிழக்கு, ஏழாலை.

தகவல்: எ.நித்தியானந்தராஜா (மருமகன்).

## இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.07

யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் இதழியல் டிப்ளோமா கற்கை நெறியை மேற்கொண்ட முதலாவது அணியினருக்கான முக்கிய கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பி.ப 2மணிக்கு ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

முதலாவது அணி மாணவர்கள் அனைவரையும் இக்கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(1)


A/L 2010 வரலாறு

வரலாற்றுப் பாடத்தில் வெற்றிபெற
ஆசிரியர் - K.சுதன்
B.A. (Hons) History Special

என் வகுப்பு நடைபெறும் இடங்கள்
★ பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம்
★ பொருளியற் கல்லூரி - இணுவில்
★ BARATHY - சித்தன்கேணி
இவ்விடங்களில் மட்டுமே ஆசிரியர் உங்களுடன்

A/L 2008 PAPER CLASS
சனி - ஞாயிறு பி.ப 1-2

யாழ். பொருளியற் கல்லூரியில்
ஆரம்பம்: 12.01.2008

Note:- வாழ்த்துக்கள் - A/L2007 உயர்தரப் பரீட்சையில் அதிஉயர் பெறுபேறுகளைப் பெற்று எமக்கு பெருமைதேடித் தந்த என் மாணவச் செல்வங்களை வாழ்த்தி பாராட்டுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றோம்.
உங்கள் ஆசிரியர் K.சுதன்

பொருளியற் கல்லூரி
யாழ்ப்பாணம் - இணுவில்
(இரு இடத்திலும்)

அண்மையில் வெளிவந்த பெறுபேறுகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள்

A/L DAY CLASS

கலை, வர்த்தகப்பிரிவுகள்
இன்று ஆரம்பம் திங்கள்
காலை - 8.00 மணி
அனுமதிகளை இரு இடங்களிலும் பெற்றுக் கொள்ளவும்.

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமான முறையில் ஆங்கிலத்தில் கதைக்கப் பயில் மற்றும் இலக்கணம் By.ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (சனி, ஞாயிறு). பிளாக் வீதி, சங்கானை.
"THE ROYAL IS THE BEST"

HND
AVAILABLE FOR WORKERS ON WEEKENDS

Applications for the January 2008 Intakes are opened

Obtain a world class British Qualification

Courses offered for this academic year:
- HND in Software Engineering
- HND in Computing
- HND in Business Information Technology

Delivered locally..... Recognized globally...
Edexcel's unique combination of knowledge, resources and innovation drives educational change and inspires people everywhere to achieve their educational and Professional goals.

தொழில்புரிவோர் மற்றும் தொழில்தேடுவோர் உங்களிற்காக இப்புதுவருடத்தில் வார இறுதி நாட்களில் மேற்படி HND கற்கைநெறி ஆரம்பிக்கப்படவுள்ளதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம். உங்கள் தரத்தையும் தகமையையும் உயர்த்திக்கொள்ள இவ்வரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுங்கள். மேலும் தகவல்களிற்கு கீழ்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுங்கள்.



IIS CITY CAMPUS
#200, Sivan Pannai Road, Jaffna
Tel: 222 8060 Fax: 222 6933 Web: www.iiscitycampus.net



# கண்ணீர் அஞ்சலி

நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன்ஸ் சீமாட்டி Dr.மனோன்மணி சற்குணராசா அவர்களின் அன்புத் தந்தை

## வீரகத்தி கதிரவேற்பிள்ளை

அவர்கள் காலமானதையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(69826) நல்லூர் லயன்ஸ் கழக உறுப்பினர்கள்.


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா நற்குணம்

(குணம் மோட்டோர்ஸ், கிளிநொச்சி)

யாழ்.கச்சேரியடி, பாரதி வீதியைப் பிறப்பிடமாகவும், துன்னாலையையும், கிளிநொச்சியையும் வசிப்பிடமாகக் கொண்ட



வருமான கந்தையா நற்குணம் (குணம் மோட்டோர்ஸ், நெல்லியடி - கிளிநொச்சி) (04.01.2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மா தம்பதியரின் மூன்றாவது மகனும் தர்மலிங்கம் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்), கந்தையா இராசமணி, தளையசிங்கம் மகேஸ்வரி, செல்வரட்ணம் (V.K.S எலெக்றிக்கல்ஸ், நெல்லியடி), சிவராசா (நிமலன்ஸ் ஐந்தருவி உதிரிப்பாக விற்பனையாளர்கள்), பரராஜசிங்கம் இராஜேஸ்வரி (சந்திரா-லஜன்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், துன்னாலையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், நவரத்தினம் (ராசா) அவர்களின் அன்புக் கணவரும், இராஜேஸ்கண்ணன் (வடமாகாண நீர்பாசன முகா மைத்துவப் பகுதி உத்தியோகத்தர்), நிஷாந்தி விமல்ராஜ் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஜோதினி இராஜேஸ்கண்ணன், ப.விமல்ராஜ் (ராஜன்) ஆகியோரின் பாசமிகு மாமனும், வி.திசானியாவின் அன்புப் பேரனும், கந்தையா தளையசிங்கம் (ஓய்வுபெற்ற சாரதி, இ.போ.ச.), பரராஜசிங்கம் (ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்), அமரர் கனகேஸ்வரி தர்மலிங்கம், செல்வரட்ணம் ரதி, சிவராசா சந்திராவதி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2008) திங்கட் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அல்வாய் பங்குவேம்படி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்வகிருஷ்ணா, அல்வாய் வட மேற்கு.

(சி/55070) தகவல்: குடும்பத்தினர்.

## கணபதிப்பிள்ளை இராசரத்தினம் (வவா அண்ணா)

வேத உடையார் வளவு, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கல்லாரை, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் தற்போது ஹெந்தலை, வத்தளை, கொழும்பில் வசித்து வந்தவருமாகிய கணபதிப்பிள்ளை இராசரத்தினம் (05.01.2008) சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சோதிபதியம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பி ஐயா - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராசாத்தியின் அன்புக் கணவரும், சுதாகரன் (நோர்வே), சுஜாதா(ஜேர்மனி), சுஜிவா, தினேஸ்கரன் (நோர்வே), கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், மயூரா (நோர்வே), பிரபாகரன்(ஜேர்மனி), சங்கரதாஸ்(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மல்லிகாதேவி(கனடா), சீவரத்தினம் (அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ. சங்கம்), குணரத்தினம் காலஞ்சென்ற விமலாதேவி, ஜெயரத்தினம்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், நவரத்தினம் (கனடா), தவமலர், பரமேஸ்வரி, யோகநாதன் (நோர்வே), ஜெயலட்சுமி(ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரவீணா, நஜன் ஆகியயோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (07.01.2008) திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேத உடையார் வளவு, மல்லாகம்.

(69821) தகவல்: ந. மல்லிகாதேவி, க. சீவரத்தினம், க. குணரத்தினம், க. ஜேயரத்தினம் (சகோதரர்கள்).

## ச.ம.அருளம்பலம் (பத்திரிகை நிருபர்)



மட்டுவில் தெற்கை பிறப்பிடமாகவும், கல்வயல் சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய சரவணமுத்து மயிலு அருளம்பலம் (04.01.2008) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயிலு - வள்ளிப் பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், வேலழகன்(கனடா), தேன்மொழி (ஆஸ்திரேலியா), கயல்விழி (ஆசிரியை, கொழும்பு), அருள்மொழியழகன் (கனடா), அமரர் திருமொழியழகன், பூங்கொடி(சுவிஸ்), ஆகியோரின் பாசமிகுதந்தையும், சுகுணா (கனடா), தவ்தாஸ் (ஆஸ்திரேலியா), மரிவெல் (கனடா), ஸ்ரீதரன்(சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும், விதூசனி (ஆஸ்தி ரேலியா), பாதுஷன், அஸ்வினி, சிவாணி, சுமித்திரா(கனடா), மானகி, மதுரா (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று ( 07.01.2008) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

1 ஆம் கட்டை, கல்வயல்,சாவகச்சேரி.

தகவல்: குடும்பத்தினர்

## பொன்னுத்துரை வெற்றிவேலு (பளிங்கு)

(முன்னாள் C.T.B ஊழியர்)

ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை வெற்றிவேலு (பளிங்கு) 06.01.2008 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை-மரகதம் தம்பதிகளின் மகனும், நடராசா-நாகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், புவனேஸ்வரியின்அன்புக்கணவரும், மயூரன், நித்தியா, திவ்வியா ஆகியோரின் பாசமிகு தகப்பனும், கனகாம்பிகை (சறோ)யின் அன்புச் சகோதரனும், பிரதீபா, அபிதரனின் மாமனாரும், இரத்தினசிங்கத்தின் மைத்துனரும், சுசி, பிருத்திகன், பிரசாந்தின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2008) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கல்லுண்டாய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டை.

(69822) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிட்னி டெஸ்ட்டின் கடைசிக் கட்டம் பரபரப்பில் மைக்கல் கிளார்க்கிடம் பலியானது இந்தியா!

## ஆஸி. 122 ஓட்டங்களால் ''திறில்'' வெற்றிபெற்று தொடர்ச்சியான வெற்றிச் சாதனையைச் சமப்படுத்தியது

சிட்னி, ஜன.07

சிட்னியில் நடைபெற்றுவந்த இந்தியாவுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா 122 ஓட்டங்களால் 'திறில்' வெற்றிபெற்றது.

இதன்மூலம் 1999-2001ஆம் ஆண்டு பருவகாலத்தில் ஸ்ரீவ் வோ தலைமையிலான ஆஸி. அணி 16 டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக வென்று நிலைநாட்டிய சாதனையை பொண்டிங் தலைமையிலான ஆஸி. அணி சமப்படுத்தியது.

நேற்றைய கடைசி நாள் ஆட்டத்தில் 333 ஓட்டங்கள் என்ற இலக்குடன் ஆடிய இந்திய அணி ஆட்டநேரம் முடிய இரண்டு ஓவர்கள் உள்ள நிலையில் 210 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளைப் பெற்றிருந்தது. கடைசிக்கு முன்னதான ஓவரை மைக்கல் கிளார்க் வீசினார். இந்த ஓவரின் 1,2,5ஆவது பந்துகளில் மீதி 3 விக்கெட்டுகளையும் இழந்த இந்தியா 122 ஓட்டங்களால் பரிதாபப் பலியானது.

சிட்னியில் நடைபெற்றுவந்த இந்த டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்ஸில் ஆஸ்திரேலியா 463 ஓட்டங்களையும் இந்தியா 532 ஓட்டங்களையும் குவித்தன.

### நான்காம் நாள் ஆட்டம்

நேற்றுமுன்தினம் நடைபெற்ற நான்காம் நாள் ஆட்டத்தில் சிறப்பாக விளையாடிய ஹைடன், ஜக்கிஸ் ஜோடி ஆஸ்திரேலியாவுக்கு சிறப்பான தொடக்கத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. முதல் விக்கெட்டுக்கு இந்த ஜோடி 85 ஓட்டங்கள் சேர்த்தநிலையில் கும்ளேயின் பந்துவீச்சை எதிர்கொள்ளத் திணறிய ஜக்கிஸ் (42), யுவராஜிடம் பிடிகொடுத்து வெளியேறினார். தொடர்ந்து அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹைடன் அரைச்சதம் கடந்தார். பொறுப்புடன் விளையாடத் தவறிய பொண்டிங் (1) மீண்டுமொரு முறை ஹர்பஜனின் சுழலில் சிக்கி, விக்கெட்டைப் பறிகொடுத்து ஏமாற்றமளித்தார். அடுத்து வந்த ஹசே [illegible] ஜோடி சேர்ந்தார்

ஆஸ்திரேலிய வீரர்கள் வழக்கத்துக்கு மாறாக பொறுமையுடன் துடுப்பெடுத்தாடினார்கள். இந்தியப் பந்துவீச்சை நேர்த்தியாகச் சமாளித்த இந்த ஜோடி ஆஸ்திரேலியாவின் ஓட்ட எண்ணிக்கையை கொஞ்சம் கொஞ்சமாகக் கூட்டியது. கலக்கலாகத் துடுப்பெடுத்தாடிய ஹைடன் டெஸ்ட் அரங்கில் 29ஆவது அரைச்சதம் கடந்தார். இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 160 ஓட்டங்களைச் சேர்த்தது

மெல்ல அதிரடிக்கு மாறிய ஹைடன், கும்ளே பந்தை 'ரிவர்ஸ் ஸ்விப்' செய்ய, அது ஜாபரின் கையில் தஞ்சம் புகுந்தது. ஹைடன் 12 பவுண்டரிகள் உட்பட 123 ஓட்டங்களை எடுத்தார். கும்ளே வீசிய 'கூக்ளியை' கணிக்கத் தவறிய மைக்கல் கிளார்க்(0) அடுத்த பந்தில் பெவிலியன் திரும்ப, 'ஹட்ரிக்' வாய்ப்புக் கிடைத்தது. அடுத்து வந்த சைமண்ஸ் அதைத் தடுத்து ஆட முயற்சிக்க, பந்து கால்காப்பில் பட்டது. இந்திய வீரர்கள் எல்.பி.டபிள்யூ. முறைப்பாடு செய்தனர். ஆனால், நடுவர் இல்லை என மறுத்துவிட்டார்.

முதல் டெஸ்ட்டில் சோபிக்கத் தவறிய ஹசே நேற்றுமுன்தினம் இந்தியாவுடனான டெஸ்ட்டில் முதல் அரைச்சதம் கடந்தார். ஆஸ்திரேலியா நேற்றுமுன்தினம் நிறைவு பெற்ற நான்காவது நாள் ஆட்டநேர முடிவில் இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 282 ஓட்டங்களை எடுத்திருந்தது. ஹசே 87 ஓட்டங்களுடனும், சைமண்ஸ் 14 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

### ஐந்தாம் நாள் ஆட்டம்

நேற்று கடைசி மற்றும் ஐந்தாம் நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து சிறப்பாக ஆடிய ஹசே டெஸ்ட் அரங்கில் 8ஆவது சதம் கடந்து அசத்தினார். அவருக்கு சிறப்பான ஒத்துழைப்பு வழங்கிய சைமண்ஸ் 61 ஓட்டங்களை விளாசி ஆர்.பி.சிங்கின் வேகத்தில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த கில்கிறிஸ்ற், பிரட் ஹொக் ஆகியோர்தலாஓர் ஓட்டத்துடன்ஆட்டமிழந்தனர்.

ஆஸ்திரேலியா தனது 2ஆம் இன்னிங்ஸை 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 401 ஓட்டங்களுடன் 'டிக்ளேயர்' செய்தது. சிறப்பாக ஆடிய மைக்கல் ஹசே கடைசிவரை ஆட்டமிழக்காமல் 145 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார்.

### இந்தியாவின் இலக்கு 333 ஓட்டங்கள்

முதல் இன்னிங்ஸில் 69 ஓட்டங்கள் முன்னிலை வகித்த இந்தியாவுக்கு 333 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இதனை எதிர்கொண்டு ஆடிய இந்தியா முதல் ஓவரிலேயே - பிரட் லீயின் வேகத்தில் வசீம் ஜாபரை ஓட்டமெதுவும் பெறாமல் இழந்தது. நம்பிக்கை தருவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட லக்ஸ்மன் (20) மற்றும் சச்சின் டெண்டுல்கர் (12) ஆகியோர் ஸ்ருவேட் கிளார்க்கின் வேகத்தில் விரைவாக விக்கெட்டைப் பறிகொடுத்தனர். 54 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகள் இழப்பு எனும் நிலையில் டிராவிட் மற்றும் கங்குலி ஆகியோர் ஜோடி சேர்ந்து அணியை மீட்டனர். நிதானமாக ஆடிய டிராவிட்டை சைமண்ஸ் 38 ஓட்டங்களோடு வெளியேற்றினார். அதே ஓவரில் யுவராஜ் சிங்கும் (0) ஆட்டமிழந்தார்.

ஓரளவு போராடிய கங்குலி 51 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பிரட் லீயின் பந்துவீச்சில் சரணடைந்தார். 137 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து தவித்த இந்திய அணியைத் தூக்கி நிறுத்த டோனி மற்றும் கும்ளே ஆகியோர் போராடினர். டோனி 35 ஓட்டங்களுடன் சைமண்ஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

பின்னர் கும்ளே மற்றும் ஹர்பஜன் தோல்வியைத் தவிர்க்கப் போராடினர். இருவரும் போட்டியைச் சமப்படுத்தலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்திக் கொண்டிருக்க ஆட்டமும் இறுதிக் கட்டத்தை அடைந்தது.

### கடைசிக்கு முதல் ஓவரில் வீழ்ந்த இடி

இந்திய அணி ஆட்டநேரம் முடிய இரண்டு ஓவர்கள் உள்ள நிலையில் 210 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளைப் பெற்றிருந்தது. கடைசிக்கு முதல் ஓவரை வீசிய மைக்கல் கிளார்க் இந்திய அணிக்கு பேரிடியாக விளங்கினார். இந்த ஓவரின் 1,2,5ஆவது பந்துகளில் மீதி 3 விக்கெட்டுகளையும் இழந்த இந்தியா 210 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. கும்ளே 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

### ஆஸி. 'திரில்' வெற்றி

இறுதியில் ஆஸ்திரேலியா அணி 122 ஓட்டங்களால் 'திரில்' வெற்றி பெற்றது. பந்துவீச்சில் மைக்கல் கிளார்க், சைமண்ஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், பிரட் லீ மற்றும் ஸ்ருவேட் கிளார்க் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். பொண்



டிங் தலைமையிலான ஆஸ்திரேலியாவுக்கு டெஸ்ட் அரங்கில் கிடைக்கும் தொடர்ச்சியான 16ஆவது வெற்றி இதுவாகும். இதன்மூலம் 1999-2001ஆம் ஆண்டு பருவகாலத்தில் ஸ்ரீவ் வோ தலைமையிலான ஆஸி. அணி 16 டெஸ்ட் போட்டிகளில் தொடர்ச்சியாக வென்று நிலைநாட்டிய சாதனையை பொண்டிங் தலைமையிலான ஆஸி. அணி சமப்படுத்தியது. பேர்த்தில் நடைபெறவுள்ள 3ஆவது டெஸ்ட்டில் வெற்றி பெறும் பட்சத்தில் பொண்டிங் தலைமை புதிய சாதனையை நிலைநாட்டும்.

சிட்னி டெஸ்ட் போட்டியின் சிறப்பாட்டக்காரராக அன்ட்ரூ சைமண்ஸ் தெரிவானார். இந்தப் போட்டியில் நடுவர்களின் மோசமான தீர்ப்புகளும் இந்தியாவுக்குப் பின்னடைவை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இரு அணிகளுக்குமிடையிலான 3ஆவது டெஸ்ட் போட்டி எதிர்வரும் 10ஆம் திகதி தொடங்கவுள்ளது.




# கிரேம் சிமித் சிறப்பாட்டம் தென்னாபிரிக்கா வெற்றி

கேப்ரவுண், ஜன.07

கிரேம் சிமித் அதிரடியாக ஆடி 79 பந்துகளில் 85 ஓட்டங்களைக் குவிக்க, மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா 7 விக்கெட்டுகளால் வெற்றியைப் பதிவு செய்தது. இதன் மூலம் டெஸ்ட் தொடர் தற்போது 1 - 1 என்ற கணக்கில் சமனிலை அடைந்துள்ளது. டர்பனில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டி தொடரைத் தீர்மானிக்கவுள்ளது.

தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. முதல் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றது. 2ஆவது போட்டி கடந்த புதன்கிழமைமுதல் கேப்ரவுணில் நடைபெற்று வந்தது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் மேற்கிந்தியத் தீவுகள் 243 ஓட்டங்களையும் தென்னாபிரிக்கா 321 ஓட்டங்களையும் பெற்றன.



சிமித்

78 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆம் இன்னிங்ஸை ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, அன்ட்ரூ நெல் மற்றும் டேல் ஸ்ரைன் ஆகியோரின் வேகங்களில் ஆட்டம் கண்டது. இறுதியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 2ஆம் இன்னிங்ஸில் 262 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அணி சார்பாக சிறப்பாக ஆடிய சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 70 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். இவர் முதல் இன்னிங்ஸிலும் ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

தென்னாபிரிக்காவின் பந்துவீச்சில் டேல் ஸ்ரைன் 4 விக்கெட்டுகளையும், அன்ரூ நெல் 3 விக்கெட்டுகளையும், நிற்னி, கலிஸ், ஹரீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தென்னாபிரிக்கா வெற்றிபெற 186 ஓட்டங்கள் தேவைப்பட்டது. நேற்றுமுன்தினம் நடந்த நான்காம் நாள் ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 3 விக்கெட்டுகளை இழந்து இலக்கை அடைந்தது. ஆரம்ப வீரரான அணித்தலைவர் சிமித் 11 பவுண்டரிகளுடன் 79 பந்துகளில் 85 ஓட்டங்களை விளாசி அணியின் வெற்றிக்குப் பெரிதும் பங்காற்றினார். இறுதியில் 35.2ஆவது ஓவரில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 186 ஓட்டங்களைப் பெற்று தென்னாபிரிக்கா 7 விக்கெட்டுகளால் வாகை சூடியது. கலிஸ் 22 ஓட்டங்களுடன் பிரின்ஸ் 12 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரராக முதல் இன்னிங்ஸில் 98 ஓட்டங்களைச் சேர்த்த தென்னாபிரிக்காவின் அஸ்வெல் பிரின்ஸ் தெரிவானார்.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி எதிர்வரும் 10ஆம் திகதி டர்பனில் ஆரம்பமாகின்றது.

# விக்ரோறி சுழலில் மாண்டது பங்களாதேஷ்

## முதல் டெஸ்ட்டில் நியூஸிலாந்து 9 விக்கெட்டுகளால்

டுன்டீன், ஜன.07

பங்களாதேஷிற்கு எதிரான முதல் டெஸ்ட்டில் நியூஸிலாந்து அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது. டானியல் விக்ரோறி சுழலில் பிரகாசித்து அணியின் வெற்றியை இலகுவாக்கினார்.

நியூஸிலாந்துக்குச்சுற்றுப்பயணம்செய்துள்ள பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. தொடரில் முதல் போட்டி கடந்த வியாழக்கிழமை முதல் டுனீடின்னில் நடைபெற்று வந்தது. இந்தப் போட்டியின் முதல் இன்னிங்ஸில் பங்களாதேஷ் 137 ஓட்டங்களுக்குள் சுருண்டது. பதிலளித்த நியூஸிலாந்து அணி தனது முதல் இன்னிங்ஸில் 357 ஓட்டங்களைக் குவித்தது: மத்தியூ பெல் 107 ஓட்டங்களையும் ஜேக்கப் ஓரம் 117 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்திருந்தனர்.

220 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் தனது 2ஆம் இன்னிங்ஸை ஆடிய பங்களாதேஷ் அணி 2ஆம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 148 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று போட்டியின் 3ஆம் நாள் ஆட்டம் நடந்தது. பங்களாதேஷின் ஆரம்ப வீரர்களான ரமீம் இக்பால், யூனியாட் சித்திக் ஆகியோர் தொடர்ந்தும் சிறப்பாக ஆடுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அணி மேலதிகமாக 13 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் ரமீம் இக்பால் 84 ஓட்டங்களுடன் மில்ஸின் வேகத்தில் 'போல்ட்' ஆனார். தொடர்ந்து மற்றைய ஆரம்பவீரரான யூனியாட் சித்திக் (74 ஓட்டங்கள்), கிறிஸ் மாட்டினின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தார். இந்த ஜோடி முதல் விக்கெட்டுக்காக 161 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது. இருவரும் தங்களது முதல் டெஸ்ட்டில் விளையாடியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து வந்த வீரர்களை விக்ரோறியின் சுழல் மிரட்டியது. அவருக்கு வேகங்கள் சரியான விதத்தில் ஒத்துழைப்பு வழங்க பங்களாதேஷ் அணி அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து பரிதவித்தது. இறுதியில் பங்களாதேஷ் அணியின் 2ஆம் இன்னிங்ஸ் 254 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. பின்னர் வந்த வீரர்களில் சஹாரியர் நபீஸ் 28 ஓட்டங்களையும், அஸ்ரபுல் 23 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றிருந்தனர்.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் டானியல் விக்ரோறி 4 விக்கெட்டுகளையும், கிறிஸ்மாட்டின், ஒபிரைன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும், மில்ஸ், ஓரம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழத்தினார்.

முதல் இன்னிங்ஸில் 220 ஓட்டங்களால் முன்னிலை வகித்த நியூஸிலாந்து அணிக்கு வெற்றி பெற 35 ஓட்டங்கள் தேவைப்பட்டன. இலக்கைக் கலைத்த நியூஸிலாந்து அணி ஆரம்ப வீரரான கியூமிங்கை 4 ஓட்டங்களுடன் மோட்டாஸாவின் வேகத்தில் இழந்தது. எனினும் பின்னர் ஜோடி சேர்ந்த மத்தியூ பெல் - பீற்றர் புல்ரன் ஜோடி அணியை 8.1ஆவது ஓவரில் வெற்றிக்கரை சேர்ந்தது. அஸ்ரபுல்லின் பந்துவீச்சில் சிக்ஸர் அடித்து அணியை வெற்றிபெறச் செய்தார் புல்ரன். இறுதியில் 9 விக்கெட்டுகளால் நியூஸிலாந்து பெரு வெற்றியைப் பதிவு செய்தது. மத்தியூ பெல் 20 ஓட்டங்களுடனும், புல்ரன் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்தப் போட்டியின் நாயகனாக ஜேக்கப் ஓரம் தெரிவானார். இரு அணிகளுக்குமிடையிலான 2ஆவது போட்டி எதிர்வரும் 12ஆம் திகதி வெலிங்டனில் ஆரம்பமாகவுள்ளது.

# மீண்டும் கிப்ஸ்

கேப்டவுன், ஜன. 07

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் மீண்டும் ஹேர்சல் கிப்ஸ் இணைக்கப்பட்டுள்ளார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக டர்பனில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இவர் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆரம்பவீரரான நீல் மக்கன்ஸி விளையாடமாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. காயம் காரணமாக அவதிப்பட்டு வருவதாலேயே அவர் மூன்றாவது போட்டியில் விளையாடமாட்டார். அவருக்குப் பதிலாகவே கிப்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 83ஆவது அகவையில்



சிவத்தமிழ்ச் செல்வி

கலாநிதி **தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்கள் 07.01.2008 இல் 83 அகவையில்

அம்மையின் சைவப்பணி தொடரவும்
தமிழ்ப்பணி தழைக்கவும்
கல்விச் சேவை தொடரவும் பொதுப்பணி ஓங்கவும்
எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவி அம்மன் அருள்புரிய
வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
பழைய மாணவர்கள், பெற்றோர்கள்.
யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

(69736)

## பருத்தித்துறை டிப்போ ஆண்டுநிறைவு விழா

வடமராட்சி,ஜன.7

இலங்கை போக்குவரத்துச் சபையின் 50ஆவது ஆண்டு நிறைவுவிழா பருத்தித்துறை இ.போ.ச.டிப்போவில் அண்மையில டிப்போ முகாமையாளர் ரி.யோகநாதன் தலைமையில் நடைபெற்றது.

டிப்போவுக்கு எதிரில் உள்ள் மருதடி வைரவர் ஆலயத்தில் விசேட பூசைகள் வழிபாடு நடத்தப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து டிப்போவின் ஒவ்வொரு பிரிவுகளிலிருந்தும் ஒவ்வொரு பிரதிநிதி உரையாற்றினார்.

(202-160)

## இன்றைய ஆட்டங்கள்

வலி.வடக்கு,ஜன.7

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 3மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:

மாதகல் சென்.தோமஸ் இளைஞர் வி.க. எதிர் மூளாய் வளர்மதி வி.க.

தாவடி காளியம்பாள் வி.க. எதிர் ஏழாலை ஞானமுருகன் வி.க.

இளவாலை சென்.ஹென்றிஸ் வி.க எதிர் அராலி தெற்கு மாவத்தை வி.க. (203-86)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது அன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய
*பேராசிரியர்*

**நாகலிங்கம் சண்முகலிங்கன்**

அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக நியமிக்கப்பட்டதையிட்டு அவர்களை மகிழ்வுடன் பாராட்டுவதுடன் அவர்கள் எல்லா நலன்களையும் பெற்று இன்புற வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

**முதுகலைமாணி மாணவர்கள்**

கூடித்தொகை அபிவிருத்திக் கற்கை நெறி 2005/2006,
யாழ்.பல்கலைக்கழகம்.

## 83ஆவது அகவையில்...!



சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி

**தங்கம்மா அப்பாக்குட்டி**

அவர்கள் இன்று (07.01.2008) 83ஆவது அகவையில்
கால் பதிக்கும் இந்நாளில்.

அம்மையின்.... சைவப்பணி தொடரவும்
தமிழ்ப்பணி தழைத்து ஓங்கவும் கல்விச்சேவை தொடரவும்
பொதுப்பணி வளரவும் எல்லாம் வல்ல ஸ்ரீ துர்க்காதேவி அம்மன்
அருள்புரிய வாழ்த்துகின்றோம்.

01, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீநிதியா நகைமாளிகை,
உரிமையாளரும், ஊழியர்களும்.

(சி/55067)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கனகரத்தின மதிலே
காரியாலயக் கடமைதனை
கண்ணியமாய் புரிந்து வந்து
அகவை அறுபதிலே ஓய்வுபெறும்
இரத்தின சிங்கம் அவர்களை
மனதார வாழ்த்துகின்றோம்

எமது கல்லூரியில் கடந்த ஏழுவருடங்களாக அலுவலகப் பணியாளராகக் கடமையாற்றி தனது 34 வருட சேவையை நிறைவு செய்து ஓய்வுபெறும் **கந்தையா இரத்தினசிங்கம்** அவர்கள் ஓய்வு காலத்தில் சீருடனும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றோம்.

யா/கனகரத்தினம்
ம.ம.வி.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள், பாடசாலை
அபிவிருத்திச் சங்கம், பழைய
மாணவர் சங்கம்.

# புனித பத்திரிசியார் கல்லூரி முன்னாள் அதிபர்

அருட்கலாநிதி

## ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளாரின்

## சேவைநலன் பாராட்டு விழா

FIDE ET LABORE
ST. PATRICK'S COLLEGE

**07.01.2008**



| | |
|---|---|
| 13.05.1948 | - பிறப்பு |
| 24.04.1974 | - குருவாக திருநிலைப்படுத்தப்பட்டமை |
| 1976 - 1979 | - உபஅதிபர் புனித ஹென்றியரசர் கல்லூரி - இளவாலை |
| 1980 | - முதுகலைமாணிப் பட்டம் ( Hull, U.K. ) |
| 1988 | - கலாநிதிப்பட்டம் (Southampton U.K.) |
| 1989 - 2002 | - அதிபர் புனித ஹென்றியரசர் கல்லூரி - இளவாலை |
| 1997 | - யாழ் பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் |
| 2002 - 2007 | - அதிபர் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரி |
| 2006 | - யாழ் கல்வியியற் கல்லூரி ஆலோசனை சபை உறுப்பினர் |
| 13.05.2007 | - யாழ் மறை மாவட்ட குருமுதல்வர் |
| 2008 | - முகாமையாளர் புனித வளனார் அச்சகம் |

*09.30 a.m. - Holy Mass at St.Mary's Cathedral*
*11.00 a.m. - Felicitation in the College Hall*

*Parents, Oldboys and Wellwishers are cordially invited to the above function.*

-Rector, Staff & Students.

நற்குருவே
நல் ஆசானே
நற்குரு முதல்வனே
நல்லாயனே
நற்பணி தொடர
நல்லாசிகள், வாழ்த்துக்கள்.

- பத்திரிசிய குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின் துன்பங்களின் மத்தியிலும் தளராது நற்பணிகளைத் தொடரும் அன்னை தங்கம்மா

*மன்னிய துர்க்கைத் தாயின் மனமகிழ்*
*அடிமையாகி*
*அன்னையாய் ஆதரிக்கும்*
*அநாதரட் சகியு மாகித்*
*தன்னிலை நிறைந்த செல்வி தங்கம்மா*
*அப்பாக்குட்டி*
*பன்னெடுங் காலம் சோதிப்*
*பவளம்போல் வாழி வாழி.*

- அருட்கவி சீ.விநாசித்தம்பி.

இந்த அற்புத பாடலுக்கு இலக்கண மாக அநாதரட்சகியாக வாழும் எங்கள் அன்னைக்கு இன்று அகவை எண்பத்தி மூன்று பூத்தியாகிறது. சொல்லாலும் செய லாலும் ஒன்று பட்டு வாழும் ஒப்பற்ற ஆன் மீக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி. இந்த அவனியில் உதித்த நாளை உலகெலாம் வாழும் ஈழத்தமிழர் பக்திபூர்வமாகக் கொண் டாடுவது வழக்கம். யாழ். குடாநாட்டில் வாழும் சைவ மக்கள் கண்கண்ட தெய்வ மாகக் கருதி தினமும் இவரைத் தேடிச் செல்வர். தேசம் போற்றும் தெல்லிநகர் துர்க்கை அம்பாளின் திருவருளை உல கறிய வைத்த உத்தமி.

ஐம்பதுகளில் பெண்கள் எம் மண்ணில் மேடையேறுவது என்பது மிகவும் அருமை. ஆடல் பாடல்களில் மேடையில் பெண் கள் தோன்றினாலும் சொற்பொழிவு ஆற்று வதற்கு பெண்கள் முன்வருவதும் மிகவும் குறைவு. இந்நிலையில்தான் சேர் பொன். இராமநாதன் உருவாக்கிய இராமநாதன் கல்லூரியில் இயங்கிய சைவ ஆசிரிய கலா சாலையில் ஆசிரிய மாணவியாகக் கற்ற



செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பல்துறை ஆளுமை மிக்க நல்லாசிரியையாக உரு வாக்கப்பட்டார். இந்தியாவிலிருந்து வந்து கல்வி புகட்டிய பேரறிஞர்களிடம் கற்கும் வாய்ப்புப் பெற்றார் அன்னை. இராமநாதன் கல்லூரி விடுதிச் சாலை வாழ்க்கை முறை அம்மாவின் வாழ்வில் புதிய பரிமாணத்தை உருவாக்கியது. அதிகாலை நித்திரையால் எழுவது, பூப்பறித்து மாலை கட்டுவது, கல்லூரியில் உள்ள சிவன் கோயிலை வலம் வருவது, கூட்டுப் பிரார்த்தனை செய்வது, ஆசிரிய, மாணவர் கூட்டங்களை நடத்து வது, பேராசான்களின் ஐயம் தெளிவிக்கும் அறிவுரைக் கூட்டங்களில் பங்குபற்றுவது. இவைதான் துடிதுடிப்பான தங்கம்மா என் னும் தங்க மகளை சமூகம் பெற வழிவகுத் தது.

### ஒழுக்கம் பண்பாடுகளை அறியும் பேறு

மட்டக்களப்பிலும், கொழும்பிலும், தெல்லிப்பழையிலும் முஸ்லிம், கிறிஸ் தவ பாடசாலைகளில் ஆசிரியரகப் பணி யாற்றும் பேறுபெற்ற அம்மையார் பிற சமய ஒழுக்கப்பண்பாடுகளையும் அறியும் பேறு பெற்றார். நல்லை நகர் நாவலர் பெருமான் வழியில் தொண்டாற்ற வேண்டும் என்ற ஆவல் அவரது உள்ளத்தில் ஊற்றெடுத் தது. கொழும்பில் வாழ்ந்த சைவச் சான் றோர்கள் சிலரின் வேண்டுதலுக்கு அமைய சமய இலக்கிய வைபவங்கள் ஆலயங்க ளில் உரையாற்ற ஆரம்பித்த அம்மையா

## இன்று அவருக்கு அகவை 83 நிறைவு

ரின் சிறப்பு நாடு முழுவதும் பரவியது.

யாழ்ப்பாணத்திலுள்ள சைவ ஆலயங் களின் உபயகாரர்கள் அன்னையின் உரை நிகழ்ச்சியை நடத்தினால் கௌரவத்துக் குரிய விடயமாகக் கருதத் தொடங்கினர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தத் தொடங் கிய அன்னை கோயில்களை எவ்வாறு நாம் பேணவேண்டும் என்ற செய்தி முதல் சைவசமயத்தின் தத்துவங்களையும், திரு முறைகள், புராண இதிகாசங்களை பாமர மக்களும் அறியும் வண்ணம் மிக நுட்ப மாக எடுத்துரைத்தார். அம்மையாரின் சொற் பொழிவால் உயிர்ப் பலி நடைபெற்ற கோயில்கள் புனிதம் பெற்றன. சின்ன மேளம், வானவேடிக்கை, போட்டிக்கு சிகரம் கட்டும் பண்பாடு ஓய்ந்தது. ஆல யங்களில் அன்னதானம், கூட்டுப் பிரார்த் தனை, சிவத் தொண்டுகள் ஆற்றுவதால் ஏற்படும் பயனை மிக ஆணித்தரமாக தனதுரையில் எடுத்துரைதத்து பலநூறு ஆலய சம்பிரதாயங்களை நெறிப்படுத்தி யவர் அன்னை. கணீர் என்ற குரலில் திரு முறைகளைப் பாடும் புலமை அம்மாவின் சிறப்பம்சம். கடல் தாண்டிய அழைப்புக் கள் தொடர்ந்தன. மலேசியா, சிங்கப்பூர், இந்தியா, இங்கிலாந்து என அன்னையின் இனிய குரல் ஒலித்தது. உலக சைவத் தமிழ் மாநாடுகளில் குரல் ஓங்கி ஒலித்தது. ஈழத்திருநாடு பெருமை பெற்றது.

தெல்லி மாநகரில் மிகப் பழமை வாய்ந்த துர்க்கை அம்மன் ஆலயம் பற்றை வளர்ந்த சூழலில் புனர்நிர்மாணம் செய்ய அன்னையை ஆலய நிர்வாகத்தில் இணைத்தார்கள். அல்லும் பகலும் அனை வரதமும் துர்க்கை அம்மன் ஆலயமே வாழ் வெனக் கொண்டார். அதன் பலனே இன்று துர்க்காபுரம் என்ற புதிய நகரமே உரு வாகும் வகையில் ஆலயம் எழுச்சி பெற் றது. சமூகத்துக்கு ஆலயத்தின் பெயரால் தொண்டாற்ற வேண்டும் என்ற நவீன சீர் திருத்த சிந்ததனையை அன்னை முன் வைத்தார். இன்று தேசம் போற்றும் சமூகப் பணிகள் ஆலயத்தின் பெயரால் நிறை வேற்றப்படுகிறது.

உலகம் இன்று போற்றும் உத்தமியாக மிளிரும் அன்னையின் பெருமை சர்வ தேசம் முழுவதும் அறிந்ததே. கடந்த ஆண்டு அமெரிக்க ஹவாய் சைவ ஆதீ னம் உலக ஆன்மீக மறுமலர்ச்சியாளர் என்ற ஒப்பற்ற விருதினை அன்னைக்கு வழங்கிக் கௌரவித்தமை குறிப்பிடத்தக் கது.

எம்மண்ணில் மிகுந்த நெருக்கடி களுக்கு மத்தியில் மக்களோடு மக்களாக போரின் துன்பங்களை அனுபவித்த வண் ணம் தளராது நற்பணி தொடரும் அன் னையை வாழ்த்ததாத ஆத்மாக்கள் இல்லை. எண்பத்து மூன்று வயதிலும் அதிகாலை எழுந்து அம்பாள் தரிசனம் செய்து தன் ஆன்மீகத் தொடர்பினை ஆற்றி வருகிறார். இன்று ஷெல் சத்தம் தெல்லிப்பழையில் செவிகளை அடைக்கும் நிலையில் சீரான நித்திரை கூட இன்றி என்று விடியும் என்ற ஆதங்கத்தோடு எம் மண்ணின் அமைதிக் காக எல்லோரையும் எவ்வேளையும் கை கூப்பிப்பிரார்த்தித்த வண்ணமாக இருக் கும் அம்மாவின் ஆவல் விரைவில் நிறை வேற வேண்டும். அம்மா வேண்டுவது நிரந்தர சமாதானத்தை அமைதியை. தாயின் ஆவல் இந்த ஆண்டு பூர்த்தியாக நாமும் பிரார்த்தித்து இப்பெருமாட்டி பல்லாண்டு பல்லாண்டு எம்மோடு வாழ இறைய ருளை வேண்டி வாழ்த்துவோமாக.

செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்.

### போற்றியே வேண்டுகின்றோம்

*குறைவிலாத் தொண்டு செய்து*
*குவலயம் வியக்கும் தாயே!*
*நிறை பிறை ஆயிரத்தை*
*நீர் பிறந்தபின் கண்டீர் இன்று*
*கறை படியாத தொண்டால் ஏழை*
*கண்ணீரைத் துடைத்தீரன்றோ*
*இறைவனார்க்கு பாலும் தேனும்*
*ஈய்ந்திடல் போதா தென்றீர்*
*குறைவின்றி தான தர்மமெல்லாம்*
*கொடுப்பதும் இறை பணியே என்றீர்*
*மறையதும் வேதம் நான்கும்*
*மதித்துனைப் போற்று தம்மா!*
*இறை வியாம் துர்க்கை அன்னை*
*இடரின்றிக் காக்க என்று*
*பிறை அணி ஈசன் பாதம்*
*போற்றியே வேண்டுகின்றோம்.*

- விகடகவி.

### வாழ்க பல்லாண்டு செல்வியே!

திருநெறியாம் சைவத்தின் சிறப்பான
வளர்ச்சிக்காக நிதம்
திருத்தொண்டு ஆற்றிவரும்
துர்க்கா துரந்தரியே!
கருணைமிகு அன்னையே
அநாதைகளின் இரட்சகியே!
கவின்தெல்லி உறைகின்ற
துர்க்கைத் தேவியவள்
பெருங்கோயில் தனைநன்கு
நிர்வகிக்கும் தலைவியே!
பல்லாண்டு வாழ்கதாயே!
நானிலம் நலம்பெறவே!

*நாயன்மார்கட்டு*
ப. மகேந்திரதாசன்.

## 2008இல் உங்களது பலன்கள்...

### கடகம்

இந்த ஆண்டில் ஏழரைச் சனியின் முதல் சுற்றில் இருப் பவர்கள், குருபக வானின் கனிந்த பார்வை சனி பகவானின் மீது படிவதால், தடங்கல்களைத் தாண்டி வெற்றி பெறுவார்கள். அனுகூலமில்லாத சூழ்நிலைகள் சாதகமாக மாறும் காலமிது.

உங்களின் வெற்றி கடின உழைப்பிற் குப் பிறகே கிடைக்கும் என்பதைப் புரிந்த கொண்டு இந்த ஆண்டைக் கடத்தினால் பலன் பெறுவீர்கள். மேலும் உங்கள் இலக் குகளை நோக்கிப் படிப்படியாகவே முன் னேறுவீர்க்ள. அதே சமயம் மனதை அழுத் திக் கொண்டிருந்த பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள்.

பொருளாதாரத்தில் சீரிய முன்னேற் றங் களை குரு பகவானும், தனாதிபதியும் வழங்குவார்கள். அரசாங்கத் தொடர்புகள் உங்களுக்குச் சாதகமாகவே அமையும். நெருக்கடியான சூழ்நிலைகளில் மதி நுட் பத்துடன் செயல்படுவீர்கள். நீண்டதூரப் பயணங்களைமேற்கொள்ள நேரிடும். சிலர் குடியிருக்கும் வீட்டை மாற்றுவார் கள்.

தர்ம சிந்தனைகள்மேலோங்கும் . பெரி யோர்களின் ஆசிகள் கிடைக்கும். உடலில் இருந்த சோர்வும், ஆயாசமும் மறையும். மருத்துவச் செலவுகள் குறைந்து காணப் படும். தாயார் வழியில் இருந்த மனக்கி லேசங்கள் விலகி, சுமுகமான உறவு உண் டாகும். உத்தியோகத்தர்கள் அனைத்து வேலைகளையும் குறித்த காலத்திற்குள் முடித்து, மேலதிகாரிகளின் பாராட்டு களைப் பெறுவார்கள். பணவரவு குறித்த நேரத்தில் சரியாக வந்து சேலரம். அதே நேரம் சக ஊழியர்களுக்கும் உங்களுக்கும் சிறிய மனஸ்தாபம் உண்டாக நேரிடலாம். அதனால் அவர்களிடம் விட்டுக்கொடுத்து நடந்து கொள்ளவும். இந்த ஆண்டு சிறு விரயங்களும், கஷ்டங்களும் உண்டாகும்.

வியாபாரிகளுக்கு முயற்சிகளுக்கு ஏற்ற லாபம் கிடைக்கும். சில இடையூறு களுக்குப் பிறகே லாபத்தைக் காண்பீர்கள். கொடுக்கல்-வாங்கல் விஷயங்கள் இந்த ஆண்டு முழுவதும்நன்றாக இருந்தாலும், புதிய முதலீகளில் ஈடுபடவேண்டாம்.

விவசாயிகளுக்கு இந்த ஆண்டு விளைச் சல் குறையும். அதனால் புதியபயிர் கள் உற்பத்தி செய்ய வேண்டாம். அத்தோடுட புதிய கடன்களையும் வாங்க வேண்டாம்.

கலைத் துறையினர் புதிய ஒப்பந்தங் கள் பெற தீவிரமாக முயற்சிக்க வேண்டி வரும். அதே சமயம் அதற்காக உங்கள் அந் தஸ்த்துக்கு குறைவான செயல்களில் ஈடுபடவேண்டாம்.

பெண்மணிகள் மனநிம்மதி பெற ஆன்மீகத்தில் நாட்டம் செலுத்துங்கள். அளவுக்கு மீறி ஆசைப்பட்டு வில்லங்கத் தில் மாட்டிக் கொள்ளவேண்டாம். மற்ற படி குடும்பத்தில் சந்தோஷத்திற்குக் குறைவு வராது.

மாணவமணிகள் மதிப்பெண்களைப் பெறுவதற்கு கடினமாக உழைக்க வேண்டி வரும். இருப்பினும் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஆதரவினால் உற்சாகத்து டன் படிப்பில் ஈடுபடுவீர்கள். உள்ளரங்கு விளையாட்டுகளில் வெற்றி காண்பீர்கள். அதே நேரம் புதிய நண்பர்களை நம்ப வேண்டாம்.

## வாசகர் திருமுகம்

### பொலித்தீனுக்கு மாற்றுபொருள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்

சூழலை மாசுபடுத்தும் பொலித்தீன் பாவனையை சூழல் பாதுகாப்பு அமைப்புகள் யாவும் தடை செய்துள்ளன. ஆனால் மக்கள் அதனைப் பொருட்படுத்துவதாக இல்லை. இதனால் தாங்களே மறைமுகமாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அவர்கள் உணரவில்லை.

பொலித்தீனாலான தாள்கள், பைகள் பாவனையின் பின் எரித்தாலும் அழியாது, புதைத்தாலும் எளிதில் உக்கமாட்டாது மீள் சுழற்சிக்கு உள்ளாக்க முடியாது. காற்றுடன் பறந்து சூழலை மாசுபடுத்துவதுடன் மிருகங்களினால் உணவாக உட்கொள்ளப்பட்டு அவை நோய்க்குள்ளாகும். குழந்தைகளின் கைகளில் அகப்பட்டு அவர்கள் விளை யாடுவதன் மூலம் பொலித்தீன் தொண்டைக்குள் சிக்கவும், பொலித்தீன் உறைகளை முகத்தில் போட்டு மூடி விளையாடும் போது மூச்சுத் திணறல் ஏற்பட்டு சிக்கலுக்குள் ளாகவும் வாய்ப்பிருக்கினறது.

இவை மட்டுமின்றி இவ்வுறைகள் நீரினால் பிய்ந்து போகாததனால் அவற்றில் நீர் தேங்கி நின்று நுளம்புகளின் உயிர் வாழ்க்கைக்கும், ஏனைய கிருமிகள் தங்கி வாழவும் இவை வழிவகுக்கின்றது. குப்பைக்குள் இவை சிக்கிக் கொள்வதனால் குப்பைகளை யும் விரைவில் உக்கி காய விடாது துர்நாற்றத்தை ஏற்படுத்துகிறது. பெலித்தீன்கள் அதி களவில் எரிக்கும் போது மெதேன் வாயு உண்டாகி உயிர் ஆபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்புண்டு. எனவே இப்பாரிய சிக்கலுக்கான தீர்வினை மக்கள் அறிந்து கொள்வது மிகவும் அவசியமாகும்.

பொலித்தீன் பாவனைக்குப் பதிலாக மக்கள் மத்தியில் கடதாசி, துணி, தோல் பைகளின் பாவனைகளை அறிமுகப்படுத்தி பாவனையினை அதிகரித்தல் பொலித் தீனால் ஏற்படக்கூடிய தீமைகளை ஊடகங்கள் வாயிலாக எளிதில் விளக்கும் முறை யில் விளம்பரப்படுத்துதல் பாடசாலைகளில் மாணவர் மத்தியில் இது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், பொலித்தீன் ஒழிப்பு வாரம் என்ற ஒன்றை அமுலாக் கல், பொலித்தீன் பாவனையினை கைவிட்ட மாவட்டங்களை தெரிந்தெடுத்து அவற்றிற்கு பரிசளித்தல், அரசாங்கம் பொலித்தீன் பாவனையைத் தடை செய்யும் சட்டத்தை கடுமையாக்கி அமுலாக்கல் என்பவை மூலம் மக்களைப் பாதுகாக்கலாம்.

*சுதுமலை வடக்கு.*

- சு. நிசாந்தன்

### இவ்வீதியைத் திருத்த மாட்டார்களா?

துன்னாலை வடக்கில் உள்ள வல்லி யாணந்தம் கோவில் வடக்கே செல்லும் வீதி புலோலி வீதியை சென்று அடைகின்றது. அவ்வீதியால் வாகனங்களும் செல்கின்றன. மழைக்காலங்களில் நடமாட முடியாத அளவில் கற்கள் வெளி வந்து வாகனங்கள் செல்ல முடியாத அளவு குண்டும் குழியுமாக உள்ளது. மழைக்காலங்களில் வெள்ளம் தேங்கி நின்று விடுகின்றது. அவ்வீதியில் யா/துன்னாலை மேற்கு மெ.மி.த.க பாட சாலை உண்டு. அப்பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 5 கற்கும் இளம் சிறார்கள் மிகவும் கஷ்டப்பட்டு பாடசா லைக்கு சென்று வருகின்றார்கள். இவ்வீதி பல வருடங் களாக திருத்தப்படாமல் இருக் கின்றது. சம்பந்தப்பட்ட அதிகா ரிகள் கவனம் செலுத்தி இவ்வீதியை மக்கள் நலன் கருதி திருத்துவார்களா?

துன்னாலை வடக்கு.

- பொ.யோசேப்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகிறோம்



யா/சுண்டிக்குளி மகளிர்
கல்லூரியில் கல்வி பயின்ற
**நவநாதன் தக்ஷாயினி**
க.பொ.த.உயர் தரத்தில் 3A (கலைப்பிரிவு மாவட்டநிலை 2) எடுத்தமையை யிட்டு பாராட்டி வாழ்த்துகிறோம்.
*வாழ்த்துபவர்கள்:*
மாமாமார், அத்தைமார், சித்தப்பா,
மாமிமார், மச்சாள்மார், மச்சான்மார்.
(69806)

## பாராட்டி வாழ்த்துகிறோம்




*எமது கல்லூரி ஆசிரியர்கள்*
**திருமதி கோ.தேவதாசன்** *(சங்கீதம்)*,
**திரு.ப.அருந்தவம்** *(விவசாயம்) ஆகியோர் வலிகாமம் கல்வி வலயத்தின் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களாக 02.01.2008 அன்று பதவியுயர்வு பெற்றமை கண்டு பேருவகையடைகின்றோம்.*
யா/யூனியன் கல்லூரி,
யா/பொன் பரமானந்தர் ம.வி,
தெல்லிப்பழை.
(69806)
**ஆசிரியர் கழகம்.**

## கண்ணீர் அஞ்சலி

யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலய ஆசிரியை
**செல்வி மா.டயனேஸ்வரி**
அவர்களின் அன்புத்தாயார்
**திருமதி பராசக்தி மார்க்கண்டு**
அவர்கள் 31.12.2007 அன்று இறைபதம் அடைந்தமையினையிட்டு நாம் ஆழ்ந்த மனவருத்தமடைவதுடன் அவரது குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.
யா/கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம். பாடசாலைச் சமூகம். (69755)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையில் பரமுவைத்தியர் கேட்போர் கூடத்தை அமைத்து உதவிய Dr.ஆறுமுகராசா, Dr.இராமநாதன்
ஆகியோரின் அன்புச்சகோதரி
**திருமதி அரியரத்தினம் மகேஸ்வரி**
அவர்கள் இறைபதம் எய்தியதையிட்டு, அன்னாரின் குடும்பத்தின்ருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
(69792) யா/தாவடி இந்து த.க.பாடசாலை.


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

948 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மகரம்

**21 24 31 54**

**04-01-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 5416593 - 5432216

ஜக்பொட் பரிசு ரூபா. 1,717,950/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 341,004 | 10/- | 3,410,040/- |
| 2 இலக்கங்கள் | 31,266 | 20/- | 625,320/- |
| 1 இல. + லக்கினம் | 30,924 | 30/- | 927,720/- |
| 2 இல. + லக்கினம் | 2,897 | 100/- | 289,700/- |
| 3 இலக்கங்கள் | 832 | 500/- | 416,000/- |
| 3 இல. + லக்கினம் | 65 | 5,000/- | 325,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 1,717,950/- | 1,717,950/- |
| மொத்தம் | | | 8,011,730/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 406,997 | | 9,035,230/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இலக்கம் 4540836 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஜனவரி 08 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 5419155-0-57 |
| அனுராதபுரம் | 5428854-3-78 |
| பதுளை | 5425506-1-25 |
| களுத்துறை | 5428486-1-20 |
| மொனராகலை | 5425526-4-10 |

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேன் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், ஜன.7

சண்டிலிப்பாய் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு ஆலய மண்டபத்தில் திருவாசக முற்றோதல் இடம் பெறவுள்ளது. (203)

## விடுதலைப்புலிகளுக்கு டீசல் கடத்தினாராம்; சந்தேகநபர் ஒருவர் கைது

சென்னை, ஜன.7

தமிழ் நாட்டிலிருந்து விடுதலைப்புலிகளுக்கு டீசல் கடத்திவர முயன்றார் எனச் சந்தேகிக்கப்படும் நபர் ஒருவரை தமிழ்நாட்டுப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.மகேந்திரன் மண்டபம் கடற்கரைப் பகுதியில் இரண்டு டீசல் கான்களுடன் நின்றிருந்த வேளை பொலிஸார் அவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

விசாரணைகளின் போது குறித்த நபர் புலிகளுக்குப் பொருள்களை கடத்தும் முகவராகச் செயற்பட்டமை உறுதிசெய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. (2)

## கூட்டுறவு தினப்போட்டியில் வெற்றிபெற்றோருக்குப் பரிசில்

யாழ்ப்பாணம், ஜன.7

2007 சர்வதேசக்கூட்டுறவு தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை நடத்திய வினாவிடைப்போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் முந்நூறு ரூபா பெறுமதியான "கூட்டுறவு" கருவூலம் என்னும் நூலும் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்குப் பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட்டன. (203-224)

## மரதன் ஓட்டப் போட்டிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜன.7

மாகாண மட்ட மரதன் ஓட்டப் போட்டிகளுக்கு நல்லூர், கோப்பாய் பிரதேச விளையாட்டு வீரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இந்த மாத இறுதியில் இப்போட்டிகள் நடைபெறவுள்ளன எனவும் நாளை செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பிரதேச செயலக விளையாட்டுப் பிரிவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கோப்பாய் பிரதேச விளையாட்டு அலுவலர் தெரிவித்துள்ளார். (203)

## வாழைப் பழத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால் விவசாயிகளுக்கு நஷ்டம்

நீர்வேலி,ஜன.7

யாழ்.குடாநாட்டில் வாழைப்பழத்தின் விலை திடீரென வீழ்ச்சியடைந்ததை அடுத்து விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளதுடன் தாம் பயிரிட்ட வாழைச் செய்கையை கைவிட்டுள்ளனர்.

குடாநாட்டின் பிரதான சந்தைகளில் குறிப்பாக திருநெல்வேலி, மருதனார் மடம், சுன்னாகம், நீர்வேலி வாழைக் குழை விற்பனைச் சங்கத்திலும் கதலி வாழைப் பழம் ஒரு கிலோ 5 ரூபா தொடக்கம் 8 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுவருகின்றது.

இந்தத் திடீர் விலை வீழ்ச்சியை விவசாயிகள் தமது வாழைக்குலைகளைச் சந்தைப்படுத்துவதற்குப் பெரிதும் சிரமப்பட்டு வருகின்றனர்.

அத்துடன் விவசாயிகள் பலர் தமது வாழைத் தோட்டங்களில் உள்ள காய்க் குழைகளை வெட்டிக் கால்நடைகளின் தீவனத்துக்குப் பயன்படுத்தி வருகின்றனர். (203-224)

## தவறிவிட்டது

கனகசபை மோகனதாஸ் என்பவரின் தேசிய அடையாள அட்டை இல.472582437V யாழ். நகர எல்லைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள்- 588/08, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு ஒப்படைத்துதவவும். *(சன்மானம் வழங்கப்படும்).* (69812)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள SUZUELF வாகனம் உடன் விற்பனைக்குண்டு.
இல. NPJC XXXX 2000 ஆம் ஆண்டு உற்பத்தி.
தொடர்பு:
[illegible]
T.P. 021 - 226 3014 (சி/55068)

## வாழ்த்துகின்றோம்



இன்று 83ஆவது அகவையைக்
காணும் சிவத்தமிழ் செல்வி
**தங்கம்மா அப்பாக்குட்டி** அவர்கள்
வையகம் போற்ற தன்னலமற்ற உன்னத சேவையை சமூகத்துக்கு வாரி வழங்கிடும் பெருமாட்டியே! நீவிர் வாழ்க! நலமுடன் பல்லாண்டு! பல்லாண்டு!! நோயற்ற வாழ்வும் நீடித்த ஆயுளும் அருள துர்க்கை அம்மனை வேண்டுகின்றோம்.
மாவிட்டபுரம், இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்.

## வாழ்த்துகிறோம்



*அன்னை சிவத்தமிழ்ச் செல்வி*
கலாநிதி
**தங்கம்மா அப்பாக்குட்டி**
*அவர்கள் இன்று 07.01.2008 அகவை 83 பூர்த்தியை நாமும் சைவத்தமிழ் உலகுடன் சேர்ந்து வாழ்த்துகின்றோம்.*
தெல்லிப்பழை, ப.நோ.கூ. சங்கம்,
தெல்லிப்பழை.
(சி/ 55062)
**தலைவர்**
**பணிப்பாளர்கள்**
**பணியாளர்கள்.**


## BARATHY
### சித்தன்கேணி

*அண்மையில் வெளிவந்த A/L பரீட்சை முடிவுகளில் எமது நிறுவனத்தில் 3பாடங்களிலும் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழகத்துக்கு தகுதியுடைய மாணவர்களை மனதார வாழ்த்துகின்றோம்.*

**A/L 2010 கலை - வர்த்தகம்**

**புதிய வகுப்புகள் ஆரம்பம் 5.1.2008 சனி முதல்**
இப்பிரதேசத்தில் மிகப்பிரபல்யம் பெற்ற ஆசிரியர் குழுவினர்

| | | |
|---|---|---|
| பொருளியல் சுதாகரன் | கணக்கீடு முகுந்தன் | வணிகக்கல்வி பசில் |
| தமிழ் பாலா | புவியியல் குமரன் | அளவையியல் R.P.சர்மா |
| இந்து நாகரிகம் சுரேஸ் | இந்துசமயம் தரன் | அரசியல் சுகாஷ் |
| நாடக அரங்கியல் J.சுதன் | வரலாறு k.சுதன் | கிறிஸ்தவம் ஜெபமோகன் |
| ஆங்கிலம் நிஷாந்தன் | உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். | |

**குறிப்பு: இப்பகுதியில் மேற்குறிப்பிட்ட ஆசிரியர்கள் எமது நிறுவனத்தில் மட்டும்தான் கற்பிப்பார்கள்.**


## மரண அறிவித்தல்

### *நடராசா மீனாட்சியம்மா*

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மீனாட்சியம்மா நேற்று (06.01.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசாவின் (ஆசிரியர் வசாவிளான் மத்திய கல்லூரி) மனைவியும், காலஞ்சென்ற தாயுமானவர் (அப்பர்) மற்றும் சகுந்தலாதேவி, கமலாதேவி ஆகியோரின் தாயும் காலஞ்சென்ற சிவராமலிங்கம் மற்றும் தருமராசா, கமலாதேவி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.01.2008) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தருமராசா
(மருமகன்).
*சக்தி அகம்,*
*அளவெட்டி வடக்கு, அளவெட்டி.* (69513)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**தோற்றம்** 27 - 10 - 1942



**மறைவு** 19 - 12 - 2006

அமரர் **செல்லமுத்து விநாயகமூர்த்தி**
*(முன்னாள் தொழில் நுட்ப உத்தியோகத்தர், வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா)*
திதி: அபரபக்க சதுர்த்தசி

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்கள் இதயங்களில்
நீங்காத நினைவுகளுடன் வாழும்
உங்களின் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

*"திருவரங்கம்",*
*உரும்பிராய் கிழக்கு,*
*உரும்பிராய்.*
(69697)
**மனைவி,**
**பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# ஆட்டுவித்தால் ஆடாதார் யார்?

ஏற்கனவே செத்துச் செயலிழந்து சேடம் இழுத்துக் கொண்டிருந்த யுத்த நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொள்ளும் முடிவை இலங்கை அரசு இப்போது, இந்தச் சந்தர்ப்பத்தில், யுத்த வெறிப் பழி தன் மீது விழக்கூடியதாக, ஒரு தலைப்பட்சமாக, எடுத்தது ஏன் என்ற கேள்வி பல தரப்புகளிலும் இருந்து எழுப்பப்படுகின்றது.

கடந்த ஆறு ஆண்டுகளாக - இதுவரை காலமும் - யுத்த நிறுத்தம் நடைமுறையில் இருப்பதாக யுத்த நிறுத்த ஒப்பந்தம் தெரிவித்தாலும் அது பெயரளவிலேயே என்பதும், நடைமுறையில் யுத்த நிறுத்தம் என்று ஏதும் பேணப்படவேயில்லை என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி. பெயருக்கு - காகிதத்தில் - யுத்த நிறுத்த இணக்கம் நீடிக்க, மறுபுறம் முழு அளவிலான யுத்தம் களத்தில் - செயலில் - அரங்கேறிக் கொண்டுதான் இருந்தது.

புலிகள் மீது முழு அளவிலான யுத்தம் ஒன்றை அரசு கட்டவிழ்த்து விடத் தீர்மானித்தால் கூட, பெயரளவில் நீடித்த யுத்த நிறுத்தத்தை அப்படியே காகிதத்தில் தொடர விட்டுவிட்டு, மறுபுறத்தில் தனது இராணுவச் செயற்பாட்டுத் திட்டத்தையோ அல்லது முழு யுத்தத்தையோ விடுதலைப் புலிகளுக்கு எதிராக அரசினால் முன்னெடுத்திருக்க முடியும்.

அப்படியிருக்க - அதைச் செய்யாமல் விடுத்து - யுத்த நிறுத்தத்தை முறித்த தரப்பு தானே என்ற அபவாதத்தை சர்வதேச சமூகத்தின் முன்னால் தானாகவே சம்பாதித்துச் சுவீகரித்துக் கொண்டு - இத்தகைய முடிவுக்கு கொழும்பு அரசு ஏன் சென்றது என்ற கேள்வி இச்சமயத்தில் எழுவது நியாயமானதே.

தென்னிலங்கை அரசியல் கள நிலைவரப் போக்கைத் தனக்குச் சாதகமாகத் திசை திருப்புவதற்கு வேறு வழியே இல்லை என்ற எண்ணத்தில்தான் இத்தகைய அமிலச் சோதனைக்கு அரசுத் தலைமை தயாராகி, அதன் வழி சென்றிருக்கின்றது. ஆனால் தனது இந்த் முடிவின் மூலம் தனது அரசின் மூக்கணாங்கயிறு - 'லகான்' - தென்னிலங்கை பௌத்த, சிங்கள மேலாண்மைப் போக்குத் தீவிரவாதிகளின் கைகளில்தான் சிக்கிக் கொண்டுள்ளது என்பதைக் கூறாமல் கூறி ஒப்புக்கொண்டிருக்கிறது அரசுத் தலைமை என்பதும் கவனிக்கத்தக்கது.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் மேற்படி மேலாண்மைச் செருக்குப் பிடித்த ஜே.வி.பியுடனும், ஜாதிக ஹெல உறுமயவுடனும் தேர்தல் ஒப்பந்தம் செய்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, புலிகளுடனான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தைத் தமது புதிய உத்தேச அரசு கிழித்தெறியும் என்றுதான் அந்த ஒப்பந்தம் மூலம் ஒப்புக் கொண்டிருந்தார்.

ஆனால், அதைக் காலங்கடந்து - சுமார் இரண்டாண்டுகள் தாமதமாகி - இப்போது செயற்படுத்த முற்பட்டிருக்கின்றார் அவர்.

இடதுசாரி, மாக்ஸிஸ கோட்பாட்டாளர்கள் என்று தம்மைக் கூறிக்கொள்ளும் ஜே.வி.பி., மஹிந்தரின் அரசை நாடாளுமன்ற ஆசனங்களின் அட்சரகணிதக் கணக்குப்படி இக்கட்டுக்குள் - நெருக்கடிக்குள் - தள்ளி, அதன் மூலம் தன் விருப்பப்படி ஆட்டுவிக்கவும் செய்கின்றது. இந்த இடதுசாரிக் கோமாளிகளின் விருப்புக்கு அமைய அரசியல் நடவடிக்கைகள் அரங்கேறுவதையே இப்போது கொழும்பில் காண்கிறோம்.

உள்ளூர், உள்நாட்டு விடயங்களில் மட்டுமல்ல, சர்வதேச அரசியல் மற்றும் இராஜதந்திர விவகாரங்களில் கூட இந்த இடதுசாரித் தீவிரவாதிக்ளின் விருப்பப்படியே இயங்கும் கட்டாயத்துக்குள் மஹிந்தரின் நிர்வாகம் சிக்கியிருப்பதுதான் வேடிக்கையிலும் வேடிக்கை.

மேற்குலகையும், ஐ. நா. போன்ற பொது அமைப்புகளையும் புறக்கணித்து, அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளை விட்டு விலகிச் சென்று, சீனா போன்ற சிவப்பு அரசுகளை அரவணைத்து இலங்கை அரசியல் நிர்வாகம் செயற்பட வேண்டும் என்பதுதான் ஜே.வி.பியின் இலக்கு, நோக்கம், விருப்பம் எல்லாம்.

அக்கட்சி எதிர்பார்த்தபடியே எல்லாம் கனகச்சிதமாக நடந்தேறுகின்றன.

இலங்கையில் செயற்படும் ஐ.நா. அமைப்புகள் மற்றும் சர்வதேசத் தொண்டர் அமைப்புகள் போன்றவை மீது காழ்ப்புணர்ச்சியை வெளிப்படுத்தும் விதத்தில் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் அரசுப் பிரதிநிதிகள் வெளியிட்டுவரும் அறிவிப்புகள், அறிக்கைகள்-

அனைத்துலக சமூகத்தின் சிரத்தைக்கும் ஊன்றிய கவனிப்புக்கும் உள்ளான மனித உரிமைகள், அவசர மனிதாபிமானப் பணிகள், இடம்பெயர்ந்தோரின் அவலங்கள், போர்நிறுத்தம் போன்ற விவகாரங்களில் சர்வதேசத்தை - குறிப்பாக மேற்குலகை - துச்சமாக மதித்துத் தூக்கியெறியும் விதத்தில் கொழும்பு அரசு நடந்து கொள்கின்றமை -

அதற்குப் பதிலாகவும் பிரதிபலிப்பாகவும் இராஜதந்திர வார்த்தைப் பிரயோகங்களில் மேற்குலகு வெளியிடும் அறிவிப்புகள் -

இவைபோன்ற, பிற இன்னோரன்ன செயற்பாடுகள் ஜே.வி.பி. மாக்ஸிஸ வாதிகளின் விருப்பப்படியே சர்வதேச விவகாரங்களையும் கொழும்பு அரசு கையாள்கின்றது என்பதற்கு எடுத்துக்காட்டு.

புலிகளுடனான யுத்த நிறுத்தத்திலிருந்து இலங்கை அரசு விலகியமைகூட அவ்வாறு ஜே.வி.பியின் விருப்பத்தை நிறைவு செய்யும் - பூரணப்படுத்தும் - ஒரு செயற்பாடுதான் என்பதும் தெளிவு.

புலிகள் மீது தடைவிதிப்பு, தமிழர் தாயகத்தின் மீது கொடூரப் போர் என்பனவும் ஜே.வி.பி. விருப்பப்படி இனிக் கட்டவிழும் என்பதும் திண்ணம்.

அதேசமயம், மேற்குலகைப் புறக்கணிக்கும் ஜே.வி.பியின் சித்தாந்தத்தை மேலும் செயற்படுத்துவதற்காக சர்வதேச மட்டத்திலும் பல கற்றுக்குட்டித்தன நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும் என்றும் நம்பலாம்.

ஆட்டுவித்தால் ஆடாதார் யார் ஒருவர்.........?

# கைதான விஞ்ஞானபீட மாணவனை விடுவிக்க மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.7

கைது செய்யப்பட்ட யாழ்.பல்கலைக் கழக விஞ்ஞானபீட இறுதி ஆண்டு மாணவன் பாலசுப்பிரமணியம் மயூரனை விடுவித்து, பல்கலைக்கழகக் கல்வியை இயல்பாக முன்னெடுக்க உதவுமாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில்-

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதியாண்டு மாணவன் பாலசுப்பிரமணியம் மயூரன் இம்மாதம் மூன்றாம் திகதி சுற்றிவளைப்பின் போது வீட்டில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டார். அரச அதிபர் மற்றும் அசர சார்பற்ற நிறுவனங்களுக்கும் மேற்படிப்பு மாணவரின் கைது தொடர்பாக தெரியப்படுத்தியுள்ளோம்.

பல்கலைக்கழக மாணவர்கள் தமது கல்வியை சீராக முன்னெடுத்து வரும் போது மேற்கொள்ளப்பட்ட கைதால் மாணவர் மனநிலையில் அச்சத்தைத் தோற்றுவித்துள்ளது. எல்லாப்பீடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கும் தற்போது பரீட்சைகள் இடம்பெற் றுக் கொண்டிருக்கின்றன. இயல்பான பரீட்சை ஆயத்தப்படுத்தல்களில் மாணவர்கள் ஈடுபடமுடியாதுள்ளது.

கடந்த காலங்களிலும் எமது மாணவர்களுக்கு இத்தகைய இடர்கள் ஏற்பட்டன. ஆனாலும் நாம் எமது கல்வியை வெகுசிரமங்களுக்குள்ளேயே கற்று வருகின்றோம். தயவு செய்து கைதாகிய மாணவனை விடுதலை செய்து அனைவரது கல்வியையும் இயல்பாக முன்னெடுக்க உதவுமாறு சம்பந்தப் பட்ட தரப்பினரையும் வேண்டுகின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சேவைநலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், ஜன.7

புனித பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் அதிபர் அருட்கலாநிதி ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளாரின் சேவைநலன் பாராட்டு விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கல்லூரியின் மத்தியூஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னதாக காலை 9.30 மணிக்கு செண்.மேரிஸ் பேராலயத்தில் ஆராதனை நிகழ்வுகள் இடம்பெறும். (203)

# எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பற்ற நிலைபற்றி குரூஸ் அம்மையாருடன் பேச்சு

## டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா இன்று நடத்தவுள்ளார்

யாழ்ப்பாணம், ஜன.7

எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பற்ற நிலைமை தொடர்பாக இலங்கைக்கான சுவிற்சார்லாந்து நாட்டு தூதரகத்தின் மனித உரிமைகள் தொடர்பான ஆலோசகர் ரேச்சல் குருஸ் அம்மையாரை டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா இன்று சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

சுவிஸ் தூதரகத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ள இச்சந்திப்பில் குருஸ் அம்மையாருடன் நாடாளுமன்ற உறுப்பினரும் ஐ.தே.கட்சியின் நிவாரண, மனித உரிமைகள் குழுத் தலைவருமான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனா பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளார்.

குறிப்பாக எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பாதுகாப்பு குறைக்கபட்டுள்ளமை தொடர்பாக அவர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் குருஸ் அம்மையாரிடம் ஜயலத் எம்.பி.எடுத்துக் கூறவுள்ளார்.

இலங்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள உயிர் அச்சுறுத்தல் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களின் சர்வதேச ஒன்றியத்தின் கவனத்துக்கு ஏற்கனவே ஜயலத் எம்.பி கொண்டு வந்துள்ளார். என்றும் தெரிவிக்கப்பட்டது. (2)

# வாழ்வக நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜன.7

வாழ்வகம் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு சுன்னாகம், சபாபதிப்பிள்ளை வீதியில் அமைந்துள்ள வாழ்வக இல்லத்தில் இடம்பெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம அதிதியாக ஜனாதிபதியின் சட்டத்தரணி செல்வி சாந்தா அபிமன்னசிங்கமும் சிறப்பு விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் கௌரவ விருந்தினராக ஐ.சி.ஆர்.சி தூதுக்குழுத் தலைவர் செல்வி வலரி ஒபோட்டும் கலந்து கொள்வர்.

# கிராமிய வங்கிகளின் அபிவிருத்திக்கு ஜி.ரி.இசற் நிறுவனம் உதவ முன்வரும்

## நிறுவன இயக்குநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் செயற்பாட்டு அபிவிருத்திக்கு ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் உதவ முன்வரும் என்று நிறுவன இயக்குநர் அ.டெனிஸ் தெரிவித்துள்ளார்.

மாவட்டத்திலுள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் அனைத்திலும் ஒரேமாதிரியான செயற்பாடுகளை மேற்கொள்ளுவது மற்றும் அதன் செயற்பாடுகளைப் புதிதாக விஸ்தரிப்பது தொடர்பான செயலமர்வு ஒன்று மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்தின் தலைவர் எஸ்.தனபாலசிங்கம் தலைமையில் அண்மையில் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இந்தச் செயலமர்வில் உள்ள கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் முகாமையாளர்கள் கலந்து கொண்டனர்.இந்நிகழ்வில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் அ.டெனிஸ் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார்.

கிராமிய வங்கிகளின் அபிவிருத்தி நோக்கத்திற்குத் தேவையானவற்றை வரையறை செய்வதன் மூலம் அதன் இலக்கை அடையக் கூடியதாக இருக்கும் என்று நிறுவன இயக்குநர் அ.டெனிஸ் தெரிவித்தார். இதற்கு ஜி.ரி.இசற் நிறுவனம் உதவ முன்வரும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.(203-224)

# உரிய பாதுகாப்புக்கு உத்தரவிடக் கோரி நீதிமன்றம் செல்வதற்கு ஹக்கீம் முடிவு

கொழும்பு, ஜன. 07

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், அக்கட்சியின் ஏனைய எம்.பிக்களான பஷீர் சேகுதாவூத்,ஹஸன்அலிமற்றும்பைஸல்காசிம் ஆகியோரின் பாதுகாப்புக் குறைக்கப்பட்டமையை எதிர்த்து ரவூப் ஹக்கீம் நீதிமன்றம் செல்லவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக அரசின் சம்பந்தப்பட்ட தரப்பிற்குப் பல தடவைகள் முறையிட்டும் பலன் கிடைக்காததனாலேயே நீதிமன்றம் மீது நம்பிக்கை வைத்து ஹக்கீம் சட்ட நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளார் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹக்கீம் அமைச்சராக இருந்தபோது அவருக்கு 14 பேர் பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்தனர். அவர் அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்து அரசை விட்டு விலகியதும் அவரது காவலர்களின் எண்ணிக்கை இரண்டாகக் குறைக்கப்பட்டது.

அவர் ஒரு கட்சியின் தலைவர் என்ற வகையில் பிறகு அவரது மெய்ப்பாதுகாவலர் எண்ணிக்கை 5 ஆக உயர்த்தப்பட்டது.

இருப்பினும் தனக்கு உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகத் தெரிவித்துத் தனது பாதுகாப்பை மேலும் அதிகரிக்குமாறு ஹக்கீம் அரசைக் கேட்டிருந்தார். அவரது வேண்டுகோள் நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறே மகேஸ்வரனின் பாதுகாப்பும் குறைக்கப்பட்டு அவர் கொல்லப்பட்டமையைத் தொடர்ந்து தனக்கும் அவ்வாறானதொரு நிலை ஏற்படலாம் என்று அரசிற்குச் சுட்டிக்காட்டி தனது பாதுகாப்பை உயர்த்துமாறு ஹக்கீம் தொடர்ந்தும் அரசிற்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். எனினும் அரசு அதைக் கவனத்தில் எடுக்கவில்லை என்று கூறப்படுகின்றது.

அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்களுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல் தொடர்பாக மதிப்பீடு செய்யும் பாதுகாப்பு அமைச்சின் கீழ் உள்ள - பிரிவின் சிபாரிசுக்கு அமையவே பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கின்றது என்று அரசு தெரிவிக்கின்றது.

இதனால், தனது பாதுகாப்பையும் மற்றும் அச்சுறுத்தலை எதிர்நோக்குகின்றனர் என்று சொல்லப்படும் தனது கட்சியின் ஏனைய எம்.பிக்களின் பாதுகாப்பையும் அதிகரித்துக் கொள்வதற்காக ஹக்கீம் நீதிமன்ற உதவியை நாடத் திட்டமிட்டுள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஹக்கீமுடன் சேர்ந்து அரசை விட்டு விலகிய மு.காங்கிரஸ் எம்.பிக்களான பஷீர் சேகுதாவூத், ஹஸன் அலி மற்றும் பைஸல் காசிம் ஆகியோரின் மெய்ப்பாதுகாவலர்களின் எண்ணிக்கையும் தலா இரண்டாகக் குறைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (சி)

# அதிகாரப் பகிர்வை முன் நகர்த்தி பேச்சு மூலம் தீர்வு காணவேண்டும்

## இராணுவத் தீர்வுசாத்தியமில்லையென பிரணாப் முகர்ஜி வலியுறுத்து

புதுடில்லி, ஜன.7

இலங்கையின் இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மற்றும் கலந்துரையாடல்கள் மூலமே தீர்வு கண்டுபிடிக்கப்படவேண்டும். இலங்கையில் சிறுபான்மை மக்களின் சட்ட பூர்வமான அபிலாஷைகளை நிறைவேற்றுவ தற்கு இலங்கை அரசு முன்வர வேண்டும்.

இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி இவ்வாறு கூறி இருக் கிறார்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தில் இருந்து இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக விலகிக் கொள்வதாக அறிவித்திருப்பதையொட்டி இந்திய வெளியுறவு அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

இலங்கை இன[illegible]பிரச்சினைக்கு இராணுவத் தீர்வுகாண[illegible]டியும் என்பதை பிரணாப் முகர்ஜி [illegible]ரித்தார்.

அதிகாரப்ப[illegible]வ அமுல்படுத்தி பேச்சுவார்த்[illegible]ம் பிரச்சினைக்கு தீர்வு காணும்[illegible]லங்கை அரசை இந்தியா வலி[illegible]தி வந்துள்ளதாகக் கூறியுள்ள முக[illegible] இலங்கையிலுள்ள பல இனக்குழு[illegible]ளின் அபிலாஷைகள் குறித்து இந்தியா அறிந்து வைத்திருப்பதாகவும் அந்த சட்டரீதியான அபிலாஷைகள் இலங்கையின் அரசியல் சட்டத்துக்குள்ளே, ஆள்புல ஒருமைப்பாட்டிற்கு அல[illegible]வாக தீர்க்கப்பட வேண்டும் - என்[illegible] கூறினார். (ப)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 23 | செவ்வாய்க்கிழமை 08.01.2008 |
| நட்சத்திரம் : | பூராடம் பின்னிரவு : 12.05 |
| திதி : அமாவாசை மாலை | 6.07 |
| சுபநேரம் | : 11.02-12.32 |
| ராகுகாலம் | : 03.32-05.02 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
**குமாரரத்தினம் சின்னம்மா**

தோற்றம் 16.05.1922 மறைவு 18.12.2007



கடந்த 18.12.2007 அன்று காலமான எங்கள் குடும்ப விளக்கின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு எம்மோடு துயர்பகிர்ந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் பலவழிகளிலும் உதவியோர்க்கும் உள்ளூர், வெளியூர்களில் இருந்து தொலைபேசி மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் எமது மனமுவந்த நன்றியைத் தெரிவிப்பதோடு இன்று (07.01.2008) திங்கட்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 10 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கு.கருணானந்தசிவம் *(மகன்)*,
கு.சிறிதரன் *(மகன்)*,
திருமதி அ.வரதலட்சுமி *(மகள்)*,
கா.அருள்தாஸ்
*(மருமகன்- ஆசிரியர்)*.

51, கோணாவளை வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
(69703)

### பனங்கிழங்கு தாராளம்

நவாலி,ஜன.7

ஆனைக்கோட்டை, நவாலிப் பகுதியில் வீதிகளிலும் சந்தைகளிலும் பனங்கிழங்கு பெருமளவில் விற்பனைக்கு வந்துள்ளது.

இங்கு அவித்த 3 கிழங்குகள் 10 ரூபாவாக விற்பனைசெய்யப்பட்டு வருகின்றது. (202-100)

### மரநாய்கள் தொல்லை

நீர்வேலி,ஜன.7

நீர்வேலிப் பகுதியில் மரநாய்களின் தொல்லை அதிகரித்திருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இரவு வேளைகளில் நடமாடும் இந்த மரநாய்கள் இப்பகுதி மக்களின்வளர்ப்புகோழிகளை வேட்டையாட வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரநாய்கள்தொல்லையை அடுத்து மக்கள்இரவில் தமது கோழிகளை மரங்களில் ஏறவிடாது கூடுகளில்அடைத்து பாதுகாத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(203-224)

## பத்தாம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 16 ★ 08 ★ 1936



விண்ணில் 07 ★ 01 ★ 1998

அமரர் **மாணிக்கம் பொன்னம்பலம்**
(Drilling Foreman, Irrigation Dept., Colombo)

திதி: 07.01.2008

அணையாக நீயிருந்தாய் அன்பு தந்து
ஆசையுடன் எமை வளர்த்தாய்
இன்பம் பொங்கத் துணையாக எமைக் காத்தாய்
கள்ளங் கபடமில்லா கண்ணவர் மனங்கவர்ந்த
ஐயா உங்கள் நினைவலைகள்
என்றும் எம் மனத்திரையில் இருந்து அழியாது
உங்கள் ஆத்மசாந்திக்காக
நித்தம் நாம் வேண்டுகின்றோம்
இறைவன் திருவடியில்.

**மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு. (69735)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**முனியையாபிள்ளை செல்லத்துரை**



மலர்வு 28★09★1928

உதிர்வு 29★12★2005

திதி: 07.01.2008


எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்பிற்கும் பாசத்திற்கும் உறைவிடமாய்
வளர்ச்சிக்கும் முயற்சிக்கும் வழிகாட்டியாய் வாழ்ந்து
ஒளிச்சுடராய் திகழ்ந்த எங்கள் ஐயாவின்
நினைவுகள் ஆண்டு பல சென்றாலும் அகலாது.

57/37, திருமுருகன் வீதி,
அரியாலை. (69758)

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# ஓராண்டு நினைவஞ்சலி

## அமரர் கந்தையா சண்முகம்



அன்னையின் கரங்களில்
15.10.1935

ஆண்டவன் பாதங்களில்
19.12.2006

(திதி: 07.01.2008)

ஓராண்டு போனாலும் அப்பா!
உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வு இனி வருமோ
நினைவிலே நிஜமாகி நிஜயத்திலே நிழலாகி
நித்தம் உங்கள் முகந்தேடி
நினைவுகளைச் சுமக்கின்றோம் அப்பா!
பாரினிலே நாம் உயர்ந்திட
படிக்கல்லாய் நின்ற தெய்வமே!
ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
நீண்டு நிலைந்திருக்கும்
உங்கள் நினைவுகள்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

*உங்கள் நினைவில் வாடும்:*

**மனைவி, பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.**

321, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.இல.: 222 3479.
(69808)

நதியா- புதிய நதியா நகைமாடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளரும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.செல்வரத்தினத்தின் மணி விழா நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெற்றன.

நிகழ்வின் முன்னதாக மணிவிழா நாயகன் வி.ரி.செல்வரத்தினம் தம்பதியர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் இருந்து உடுப்பிட்டி மகளிர் கல்லூரி விழா மண்டபத்திற்கு கல்வியியலாளர்களால் அழைத்துவரப்படுவதையும் - வடக்கு - கிழக்கு மாகாண முன்னாள் கல்விப் பணிப்பாளர் செல்வி ரி.பெரியதம்பி மங்கள விளக்கேற்றுவதையும் யாழ். அரச அதிபர் க.கணேஸ் மணிவிழா நாயகனுக்கு பொன்னாடை போர்த்துக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள் : சுந்தா)

# சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கான வீடுகளை பாப்பரசரின் பிரதிநிதி புதனன்று கையளிப்பார்

வடமராட்சி,ஜன.7

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கென பருத்தித்துறை கிழக்கு, சக்கோட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட வீடுகளைப் பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி மரியோ செனாரியோ நாளைமறுதினம் புதன்கிழமை கையளிக்கவுள்ளார்.

பாப்பரசரின் இலங்கைக்கான பிரதிநிதி கலாநிதி மரியோ செனாரியோ, காலி மறை மாவட்ட ஆயர் மேதகு கலாநிதி ஹரல்ட் அன்ரனி ஆகியோர் நாளை மறுதினம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

அன்றைய தினம் வடமராட்சியில் பருத்தித்துறை கிழக்கு, சக்கோட்டை போன்ற இடங்களில் கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட வீடுகளையும் மலசலகூடங்களையும் கையளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு அவற்றைக் கையளிக்கவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாப்பரசரின் பிரதிநிதி கலாநிதி மரியோ செனாரியோ பிரதம விருந்தினராகவும் காலி மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ்.அரச அதிபர் கே.கணேஸ ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்வர்.

இலங்கை கரித்தாஸ் நிறுவன தேசிய இயக்குநர் அருட்திரு. டேமியன் பெர்ணாண்டோ, யாழ்.மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி, யாழ். மேலதிக அரச அதிபர் (சுனாமி) பி.செந்தில்நந்தனன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் விழாவில் கலந்துகொள்வர்.(203-70-160)

## நாவலர் வீதியைத் திருத்தும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.7

போக்குவரத்து செய்யமுடியாது சேதமடைந்து காணப்பட்ட நாவலர் வீதியை திருத்தும் பணிகளை யாழ். மாநகர சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டர் சந்திக்கும் பிறவுண் வீதிச் சந்திக்கும் இடையில் நாவலர் வீதி மோசமாகச் சேதம் அடைந்து காணப்பட்டது.

மழை காலத்திற்கு முன்னர் பழுதடைந்த இவ்வீதி மழைகாலத்தில் மேலும் மோசமாகச் சேதமடைந்து வெள்ளம் தேங்கி பயணம் செய்வதில் பெரும் சிரமங்களை ஏற்படுத்தியிருந்தது.

தற்போது இவ்வீதி கற்கள் போடப்பட்டு மீண்டும் திருத்தப்பட்டு வருகின்றது.

(203-86)

## பொது நூல் நிலையங்கள் இவ்வருடம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் கீழ் இயங்கும் பொது நூல் நிலையங்கள் இவ்வருடம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. இந்த அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் நிதி ஏற்பாடுகளை பெற்றுக்கொடுக்க யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

நூல் நிலையத்தின் பெயர், அமைவிடம், கிராம அலுவலர் பிரிவு, கட்டடத்தின் பரப்பளவு, நூல்களின் எண்ணிக்கை, அங்கீகரிக்கப்பட்ட ஆளணி, தற்போதுள்ள ஆளணி ஆகிய விவரங்களுடன் அபிவிருத்தி தொடர்பான மேலதிக தேவைப்பாடுகளையும் உடன் அனுப்பி வைக்குமாறு உள்ளூராட்சி சபை செயலாளர்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கேட்டுள்ளார்.

(202-207)

## வாக்காளர் பட்டியல்கள் மக்கள் பார்வைக்கு

யாழ்ப்பாணம், ஜன.7

2007 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட வாக் காளர்கள் இடாப்பு பொதுமக்களின் பார் வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.செயலகம், பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள், தபால் அலுவலகங்கள் மற்றும் கிராம அலுவலர் அலுவலகங்களில் குறிப்பிட்ட தொகுகளுக்கான திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

இப் பட்டியலில் 2007 ஆம் ஆண்டு புதிதாக சேர்க்கப்பட்டவர்களின் பெயர்ப்பட்டியல்கள் இணைக்கப்பட்டுள்ளதுடன் மரணம் அடைந்தவர்கள் மற்றும் வேறு இடங்களில் பதிவுகளை மேற்கொண்டவர்களின் பெயர்களும் நீக்கப்பட்டு புதியபட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

இப் பட்டியலில் உரிய வயதை அடைந்தவர்களின் பெயர்கள் சேர்க்கப்படாமல் விடுபட்டிருந்தால் சேர்க்கவும் நீக்கப்பட வேண்டியிருந்தால் நீக்கவும் மற்றும் ஆட்சேபனைகள் இருந்தால் ஆட்சேபனைகளையும் மேற்கொள்ளவும் முடியும்.

இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படியும் தேர்தல் அலுவலகத்தினரால் கேட்கப்பட்டுள்ளது.

(203-68)

## பாடசாலைகள் சிலவற்றின் உயர்தரப் பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.7

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பெறுபேறுகளை பாடசாலைகளின் அதிபர்கள் உதயனுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

அவர்களால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்பட்ட முடிவுகள் வருமாறு-

**சுண்டிக்குளி மகளிர் கல்லூரி**

**கலைப்பிரிவு :** தக்ஷாமினி நவநாதன் - 3ஏ(மாவட்ட நிலை 2), ராஜி மகேந்திரன் 3ஏ, துளசிகா கேசவன் 3ஏ, உமையாள் உமாகாந்தன் - 3ஏ, சக்தியாங்கனி ராஜேஸ்வரன்- 3ஏ, வித்தியா சண்முகரட்ணம் -3ஏ, மேபிள் வித்யா தேவகுமாரன் -2ஏபி, ஜெனனி விஜேந்திரன் - 2ஏபி, தயானி வண்ணமயில் - 2ஏபி, சிவாஞ்சலி சிவபாலன் 2ஏபி, தர்மிலா சிவலிங்கம் 2ஏபி, மதுரா சச்சிதானந்தன் 2ஏபி, பெட்சி ரேஷல் பெனடிக்ட் 2ஏபி, கௌதமி ரகுநாதன் 2ஏசி.

**வர்த்தகப் பிரிவு:** பிரேமினி நவரட்ணம் 3ஏ(மாவட்ட நிலை 3)

**உயிரியல் பிரிவு:** டிலானி மாதவகுமாரன் 2ஏபி, பிரதீபா விமலதர்மையா 2ஏபி, கஸ்தூரி தங்கராஜா ஏ2பி, கரோலின் கௌசிகா ஜெயசீலன் ஏ2பி.

**ஹாட்லிக் கல்லூரி**

**கணிதப்பிரிவு:** வி.ரஜீவன் - 3ஏ(மாவட்ட மட்டம் (முதலிடம்), எஸ்.சாரங்கன் - 3ஏ, ஆர்.பிரசாந்தன் - 2ஏபி, கே.திவாகரன் - 2ஏபி, கே.நிதர்சன் ஏ2பி, எஸ்.பிரசாத் - ஏ2பி.

**உயிரியல் பிரிவு:** எஸ்.நிமலன் - 3ஏ (மாவட்ட மட்டம் (முதலிடம்), எஸ்.அச்சன் 3ஏ, கே.அலன் ஜெரோசன் - 2ஏபி, எஸ்.நிரோசன் - 2ஏபி, பி.பாலச்சந்திரன் - ஏ2பி, பி.சஞ்சயன் - ஏ2பி, எஸ்.விஜயாலயன் - ஏ2பி,

**வர்த்தகப் பிரிவு:** ஐ.நிருபன் - 2ஏபி, வி.சுதர்சன் - 2ஏபி, வி.ராஜநாதன் ஏ2பி, எஸ்.கோகிலன் ஏ2பி.

**கலைப் பிரிவு:** ஆர்.நிருபன் -3ஏ, எஸ்.சங்கநாதன் -3ஏ, ஆர்.கௌசிகன் - 3ஏ, எஸ்.தினேஸ் -2ஏசி, ரி.ரமணன்-ஏ2பி, கே.உதயரூபன் - ஏ2பி, எஸ்.நிஷாந்தன் - ஏ2பி, ஆர்.நிகாஸ் - ஏ2பி.

**மானிப்பாய் மகளிர் கல்லூரி**

**விஞ்ஞானப் பிரிவு :** கஸ்தனி - பி,2சி, விஜிதா - பி2சி, இந்துஜா- 3சி,

**வர்த்தகப் பிரிவு:** மயூரா - 2ஏபி,செல்வமலர் - ஏ2பி, கிருஷிகா ஏ2பி.

**கலைப்பிரிவு :** நிவேதிகா - 3ஏ, ரோகினி - ஏ2பி, வீணுகா - ஏ2பி, வாசுகி - ஏ2பி, சாந்தரூபி - 2ஏசி, சங்கீதா - ஏபிசி, கீதாஞ்சலி - ஏபிசி, கிறிஸ்ரியானா - ஏபிசி, டினேசினி - ஏபிஎஸ், இந்துஜா - ஏ2சி, விஜயந்தி - ஏசிஎஸ், ஜெயரூபி - 3பி, சாம்பவி - 3பி, சர்மிளா- 3பி, ரேகா - 3பி, வினோஷா - 2பிசி, ஸ்ரீமதி - 2பிசி, சர்மிளா - 2பிசி, கபி லினி - 2பிசி, உஷாநந்தினி - பி2சி, உஷா நந்தினி - பி2சி,சிந்துஜா - பி2சி. (203-218)

## யாழ்.மாநகரப் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகருக்கான ஆளணி வெற்றிடங்கள்

### இதனால் சுகாதார சேவைகளில் பாதிப்பு

குருநகர்,ஜன.7

யாழ். மாநகரசபைப் பகுதியில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கான ஆளணி வெற்றிடங்கள் நிலவுகின்றன. இதனால் யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட குடியிருப்புப் பகுதிகளில் சுகாதார சேவைகளை வினைத்திறனுடன் மேற் கொள்ள முடியாமல் உள்ளது என மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

யாழ். மாநகர சபைப்பகுதியில் 23 வட்டாரங்கள் உள்ளன. இவைகள் ஒன்பது வலயங்களாக பிரிக்கப்பட்டு ஒன்பது பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மக்களின் சுகாதார நடவடிக்கைகளை கடந்த காலங்களில் சிறப்பாக மேற்கொண்டனர். யாழ்ப்பாண மாநகர சபையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட ஆளணி ஒன்பதாக உள்ள போதிலும் தற்போது ஐந்து பொது சுாகதாரப் பரிசோதகர்களே சேவையாற்றி வருகின்றனர். இவர்களில் ஒருவர் மீள் நியமனம்பெற்றவரும் மற்றொருவர் பிரதம பொது சுகாதார பரிசோதகரும் ஆவார். இவ்வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்குமாறு பிரதம செயலாளர் உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோரை பலதடவைகள் தாம் கோரிய போதிலும் இதுவரை இவ்வெற்றிடங்களை நிரப்ப எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

(202-51)

## சட்டவிரோத மின் பாவனையாளர் மீது படையினர் நடவடிக்கை

வலி.தென்மேற்கு,ஜன.7

பண்டத்தரிப்பு சில்லாலை, பிரான்பற்று ஆகிய பகுதிகளில் இரவு வேளைகளில் சட்டவிரோதமாக மின்சாரம் எடுப்பவர்கள் மீது பாதுகாப்பு படையினர் பொலீஸாரின் உதவியுடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

சட்டவிரோதமாக திருட்டு மின்சாரம் எடுப்பவர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர் இந்த எச்சரிக்கையை கடந்த சில தினங்களாக விடுத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-135)

## உயர்தொழில்நுட்பவியல் மாணவர் கவனத்திற்கு

யாழ்ப்பாணம்,ஜன.7

யாழ்.உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தில் 1996 தொடக்கம் 2000ஆம் ஆண்டு வரை கற்கை நெறிகளுக்கெனப் பதிவு செய்த மாணவர்களது பதிவுக் காலம் முடிவடைந்துள்ளமையால் நிறுவனத்தில் ஒப்படைத்திருந்த மூல ஆவணங்களை எதிர்வரும் 14ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளுமாறு நிறுவனப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(203)

## கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலயக் கேணியில் நீராடி மாசுபடுத்துவதாக மக்கள் விசனம்

யாழ்ப்பாணம்,ஜன.7

கைதடி வீரகத்திப்பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக் கேணியில் இளைஞர்கள் குழு ஒன்று தினமும் நீராடி வருவதால் இப் புனித தீர்த்தக் கேணி மாசுபட்டு வருவதாக இப்பகுதி மக்கள் மிகவும் கவலையடைந்து வருகின்றனர்.

இந்தத் தீர்த்தக் கேணி கடந்த சில வருடங்களுக்கு முன்னரே புனரமைப்புச் செய்யப்பட்டு சுவாமி தீர்த்தமாடலுக்குக் கெனப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது [illegible] இந்தத் தக்கேணி நீர் [illegible] றது. இதில் இளைஞர்கள் நீராடி வருவதை காணக்கூடியதாக உள்ளதாகவும் இதனால் புனிதத் தன்மை கெட்டுவிடும் என்றும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட இளைஞர்களுடன் இந்த விடயம் தொடர்பாக தெரிவிப்பதற்குச் சென்றால் அவர்கள் கேட்பதாக இல்லை எனவும் சண்டையிட முற்படுவதாகவும் கவலை தெரிவிக்கப்படுகிறது.

எனவே உரியவர்கள் இந்த விடயத்தில் கவனம் எடுக்கவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(203-288)

## மானிப்பாய் விவசாயிகள் சம்மேளன பொதுச் சபைக் கலந்துரையாடல்

வலி.தென்மேற்கு- பிரிவின் மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளன பொதுசபை கலந்துரையாடல் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கட்டுடையில் மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளன தலைவர் சி.பொ.வ. மா.க. முதலியார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச செயலர் திருமதி ரூ.வரதலிங்கம், யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்கள ஆணையாளர் ம. பற்றிக் டிறைஞ்சன், வடக்கு மாகாண நீர்ப்பாசன திணைக்கள மானிப்பாய் எந்திரி அ.சி.வினோதராஜ், யாழ்.மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் க.கருணாநிதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(203-95)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதிய தடயங்களைப் பெறுவதில் திணறுகின்றது ஸ்கொட்லண்ட்யாட்

## பெனாஸிர் கொல்லப்பட்ட இடம் சுத்தம் செய்யப்பட்டு விட்டமையால்


பெனாஸிர் சுட்டுக் கொல்லப்பட்ட லியாகத் பாத் பூங்கா பகுதியில் பாகிஸ்தான் பொலிஸாருடன் நேற்றுமுன்தினம் விசாரணை நடத்தும் ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸார்

இஸ்லாமாபாத், ஜன.07

பெனாஸிர் பூட்டோ கொலை செய்யப்பட்ட இடத்தைக் கழுவி சுத்தம் செய்து விட்டதால் தடயம் எதுவும் கிடைக்காமல், துப்புத் துலக்க வந்த ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸ் குழு திணறுகிறது.

பெனாஸிர் படுகொலைப் பற்றி பாகிஸ்தான் புலனாய்வுத் துறையினருடன் ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸாரும் சேர்ந்து விசாரணை நடத்துவார்கள் என்று ஜனாதிபதி முஷாரப் அறிவித்திருந்தார். அதன்படி ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸின் தீவிரவாத எதிர்ப்புப் பிரிவை சேர்ந்த 5 அதிகாரிகள் கொண்ட குழு கடந்த வெள்ளிக்கிழமை பாகிஸ்தான் வந்தது.

அந்த குழுவினர் பாகிஸ்தான் குழுவினருடன் இணைந்து விசாரணையை நேற்று முன்தினம் தொடங்கினர். முதலில் பெனாஸிர் பயணம் செய்த டொயட்டோ லேண்ட் குரூசர் காரை சோதனையிட்டனர்.

மனித வெடிகுண்டுச் சிதறல்களால் சேதம் அடைந்திருந்த அந்தக் காரை பல்வேறு கோணங்களில் படம் எடுத்தனர்.

அடுத்து பெனாஸிர் கொலை செய்யப்பட்ட லியாகத் மைதானத்துக்கு அவர்கள் சென்றனர். பெனாஸிர் கொலை நடந்த இடத்தை கழுவி சுத்தம் செய்து நினைவிடமாக மாற்றி இருந்தனர். அதனால் அந்த இடத்தில் எந்தவிதமான தடயமும் கிடைக்கவில்லை. பெனாஸிரின் கணவர் ஆசிப் அலி சர்தாரி கேட்டுக் கொண்டதால் பெனாஸிரின் உடல் பிரேத பரிசோதனை செய்யப்படவில்லை.

எனவே, அவர் எப்படி இறந்தார் என்பதற்கான பிரேத பரிசோதனை அறிக்கையும் ஸ்கொட்லண்ட்யாட் குழுவுக்கு கிடைக்காது. இதனால் தேவையான தகவல், தடயங்கள் கிடைக்காமல் ஸ்கொட்லாந்து பொலிஸ் குழு திணறும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

பெனாஸிர் கொலை குறித்து கட்சியின் செய்தித் தொடர்பாளர் ஷெரி ரஹ்மான் கூறுகையில், ''பெனாஸிர் படுகொலை பற்றி ஸ்கொட்லண்ட்யாட் பொலிஸார் நடத்தும் விசாரணைக்கு எங்கள் கட்சி ஒத்துழைப்பு கொடுக்கும். அதே நேரம், ஐக்கிய நாடுகள் சபை விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். பெனாஸிர் தனது உயிருக்கு தானே ஆபத்தை தேடிக் கொண்டார் என்று ஜனாதிபதி முஷாரப் கூறுவது அபத்தமானது.'' என்றார்.

# பெனாஸிர் பூட்டோ மீது 'லேசர்' துப்பாக்கிச் சூடு!

## மருத்துவ அறிக்கையில் தகவல்

இஸ்லாமாபாத், ஜன.07

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாஸிரின் தலையில் லேசர் கதிர்களால் ஏற்பட்ட விரிசல்கள் இருந்தன என்று மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இதனால், அவர் 'லேசர்' துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் கிளம்பியிருக்கின்றது.

மருத்துவ அறிக்கையில் இடம்பெற்றுள்ளவை குறித்து பாகிஸ்தான் மக்கள் கட்சி எம்.பி. பாபர் அவான் கூறியவை வருமாறு:-

''பெனாஸிர் மண்டையோட்டில் விரிசல் உண்டாகி, அதன் விளைவாக இதயத்துக்குச் செல்லும் இரத்தம் தடைப்பட்டு இறந்தார் என மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதேபோல், 'எக்ஸ்ரே' படத்திலும் அவருடைய மண்டையோட்டில் இரண்டு மூன்று விரிசல்கள் இருப்பதைக் காணமுடிகிறது. அந்த விரிசல்கள் அனைத்துமே, கண்ணுக்குத் தெரியாத மின்காந்த அலைகள் மூலமாக நுண்ணிய அளவில் ஏற்படுத்தப்பட்டவை எனக் கூறப்பட்டுள்ளது.

''மண்டையேட்டில் நீள் வட்ட வடிவில் ஏற்பட்டுள்ள இந்த விரிசல், லேசர் கதிர் வீச்சினால் ஏற்பட்டு இருப்பதாக மருத்துவ அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. திறந்தவெளி வாகனத்தில் மேற்கூரை இடித்ததால் தலையில் காயம் ஏற்பட்டு பெனாஸிர் இறக்கவில்லை. லேசர் கதிர் வீச்சுகளால் மண்டையோட்டில் விரிசல்கள் ஏற்பட்டு இறந்திருக்கிறார்.

''இந்த மருத்துவ அறிக்கையை ஐ.நா.குழுவுக்கு ஆதாரமாக அனுப்பி வைப்போம். பெனாஸிரின் மரணத்துக்கான காரணம் குறித்து தெளிவாக இருப்பதால் பிரேத பரிசோதனையோ அல்லது வேறு ஆய்வுகளோ இனித் தேவையில்லை.''-இவ்வாறு பாபர் எம்.பி. தெரிவித்தார்.

# நான் அமெரிக்காவின் அடிவருடி அல்லன்!

## பான்-கீ-மூன் ஆவேசம்

நியூயோர்க், ஜன.07

தான் அமெரிக்காவின் அடிவருடி அல்லன் என்று ஐ.நா பொதுச் செயலர் பான்-கீ-மூன் தெரிவித்துள்ளார். ஐ.நாவின் அனைத்து உறுப்பு நாடுகளுடனும்தான் நெருங்கிய தொடர்பில் இருக்கின்றார் என்றும் அவர் கூறியுள்ளார்.

அல்-ஜசிரா நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் பான்-கீ-மூன் மேலும் கூறியவை வருமாறு:-

''சில முக்கிய பிரச்சினைகளில் நான் உறுதியான நிலைப்பாடு எடுக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. பிரச்சினைகளின் தீவிரத்தையும், நடைமுறை சாத்தியக்கூறுகளையும் கொண்டுதான் முடிவு மேற்கொள்ள முடியும். அனைத்துத் தரப்பினர்களின் நிலையை அறிந்த பின்னர்தான் தீர்வுகாண முடியும். இவை அனைத்தையும் மேற்கொள்ள சிறிது காலம் தேவைப்படுகிறது.

''குறிப்பிட்ட நாடுகளுக்காவோ குறிப்பிட்ட பிரிவினர்களுக்காகவோ ஐ.நா. அமைப்பு செயற்படவில்லை. அனைத்து நாடுகளுக்கும் மக்களுக்காகவுமே ஐ.நா. செயல்படுகிறது.

''ஐ.நாவும் அதன் பணியாளர்களும் தீவிரவாதத் தாக்குதலுக்கு இலக்காவது பெரும் கவலை அளிக்கிறது. அல்ஜீரியாவில் கடந்த மாதம் ஐ.நா பணியாளர்கள் 17 பேர் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு பலியானார்கள். இது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம். எந்தச் சூழ்நிலையிலும் தீவிரவாதத்தை நியாயப்படுத்த முடியாது.

''நான் அமெரிக்காவின் அடிவருடியாகச் செயல்படவில்லை. உறுப்பு நாடுகள் உட்பட அனைத்து நாடுகளுடன் நெருக்கமாக செயற்பட்டு வருகிறேன்.'' - என்றார்.

# பிள்ளைகளைப் பார்க்க ஸ்பியர்ஸுக்குத் தடை



லொஸ் ஏஞ்சல்ஸ்,ஜன.07

அமெரிக்க பொப் பாடகியும், நடிகையுமான பிரிட்னி ஸ்பியர்ஸ் தனது குழந்தைகளைப் பார்ப்பதற்கு வழங்கப்பட்டிருந்த உரிமையை அந்நாட்டு நீதிமன்றம் பறித்துள்ளது.

பிரிட்னி ஸ்பியர்ஸ், தனது கணவர் கெவின் பெதர்லைனை விவாகரத்து செய்து விட்டார். இவர்களுக்கு சீன் பிரஸ்டன் (வயது-2), ஜேடன் ஜேம்ஸ் (வயது-1) என்ற 2 மகன்கள் உள்ளனர். விவாகரத்துக்குப் பிறகு, பிரிட்னி ஸ்பியர்ஸ் போதை மற்றும் குடிப்பழக்கத்துக்கு அடிமை ஆகிவிட்டதால், குழந்தைகளைக் கணவர் வசம் ஒப்படைக்க வேண்டும் என்றும், வாரத்துக்கு 3 தடவை பிரிட்னி ஸ்பியர்ஸ், தனது குழந்தைகளைச் சென்று பார்க்கலாம் என்றும் லொஸ் ஏஞ்சல்ஸில் உள்ள குடும்பநல நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதன்படி குழந்தைகளைப் பார்க்கச் சென்றபோது கெவின் பெதர்லைனின் பிரதிநிதிகளிடம், பிரிட்னி ஸ்பியர்ஸ் தகராறு செய்தார். அப்போது அவர் போதை மருந்து பயன்படுத்தியிருந்தார் என்றும், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தார் என்றும் தெரியவந்தது. இதனால் அவரை மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றனர்.

இதைத் தொடர்ந்து குடும்பநல நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அவசரமாகக் கூடியது. மறு உத்தரவு வரும்வரை, பிரிட்னி ஸ்பியர்ஸ் தனது குழந்தைகளைப் பார்ப்பதற்கான உரிமையை நிறுத்தி வைப்பதாகவும், குழந்தைகளின் ஒரே பாதுகாவலர் கெவின் பெதர்லைன் மட்டுமே என்றும் நீதிபதி அதிரடித் தீர்ப்பு அளித்தார். இதனைத் தொடர்ந்து தனது குழந்தைகளைப் பார்ப்பதற்கு வழங்கப்பட்டிருந்த உரிமையை ஸ்பியர்ஸ் பறிகொடுத்தார்.

# இளம் கிரகம் கண்டுபிடிப்பு

வானத்தில் சூரியக் குடும்பத்தில் புதிய இளம் கிரகம் ஒன்றை ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த வானியல் அறிஞர்கள் கண்டுபிடித்துள்ளனர். தற்போது, உள்ள கிரகங்களிலேயே இதுதான் இளமையானது. அந்தக் கிரகம், தற்போதுதான் காஸ்மிக் துகள்கள் மற்றும் வாயுக்களால் உருவாகி வருகிறது. ஆயினும், அந்தக் கிரகம் பூமியைப்போல், 3,115 மடங்கு பெரியது.

இந்தக் கிரகம் 80 முதல் 1 கோடி ஆண்டுகள் பழமையான ஒரு நட்சத்திரத்தைச் சுற்றி வருகிறது. இந்த நட்சத்திரத்தைச் சுற்றி முடிக்க, அதற்கு 356 நாட்கள் ஆகும் என்று கணக்கிடப்பட்டு உள்ளது. இதுவே அந்தக் கிரகத்துக்கு ஒரு ஆண்டு ஆகும்.

# எதிர்க்கட்சிகளுடன் அதிகாரத்தை பகிர்கின்றார் கென்யா ஜனாதிபதி!

## வழமைக்குத் திரும்பும் அந்நாட்டுக்கு ஐ.நா. உணவு விநியோகம்

நைரோபி, ஜன.07

கென்யா ஜனாதிபதி கிபாகி எதிர்க்கட்சிகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ளத் தயார் என அறிவித்துள்ளதைத் தொடர்ந்து அவர் பதவி விலகவேண்டும் என்ற கோரிக்கையை எதிர்க்கட்சியினர் கைவிட்டுள்ளனர். ஜனாதிபதியின் அறிவிப்பைத் தொடர்ந்து கென்யாவில் வன்முறைகள் குறைந்து அங்கு இயல்பு நிலை மீண்டும் திரும்பத் தொடங்கியுள்ளது என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அந்த நாட்டில் உருவாகியுள்ள மனிதாபிமான நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்காக ஐக்கிய நாடுகள் உணவு விநியோகத்தை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது.


அமெரிக்காவின் ஆபிரிக்க விவகாரங்களுக்கான உதவி வெளிவிவகாரச் செயலாளர் பிரேசரைச் சந்தித்த பின்னரே ஜனாதிபதி கிபாகி தேசிய அரசொன்றை அமைப்பதற்குத் தயார் எனத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அமைச்சரை இரண்டாவது தடவை சந்தித்த பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் ஒடிங்கா கிபாகி சர்வதேச மத்தியஸ்தரை ஏற்றுக்கொண்டால் அவர் பதவி விலக வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கப் போவதில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சியின் ஆதரவு இல்லாமல் கிபாகி அரசமைப்பது சாத்தியமில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கென்யாவின் சில பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன. நைரோபியின் குடிசைப் பகுதியில் தீ மூட்டப்பட்டுள்ளதுடன் கத்திகளைப் பயன்படுத்தி இரு பழங்குடிப் பிரிவினரும் மோதலில் ஈடுபட்டனர். பொலிஸார் பல பகுதிகளில் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க நைரோபியின் பல



பகுதிகளில் மக்கள் உணவுக்காக நீண்ட வரிசையில் காத்திருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. வன்முறைகள் காரணமாக உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமையைத் தொடர்ந்து உலக உணவுத்திட்டம் 66 ஆயிரம் தொன் உணவினை கென்யாவுக்கு வழங்கியுள்ளது.

சுகாதார நெருக்கடியும் கென்யாவில் உருவாகியுள்ளதாக பிரிட்டனின் அமைப்பொன்று எச்சரித்துள்ளது. அங்கு அடுத்த சில நாட்களுக்குள் முழுமையான அமைதி ஏற்படாவிட்டால் நோய்களும் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையும் ஏற்படலாம் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.




# லெபனான் அடுத்த ஜனாதிபதிப் பதவிக்கு இராணுவத் தளபதியின் பெயர் பரிந்துரை

பெய்ரூட், ஜன.07

அரசியல் ரீதியாகப் பிளவுபட்டுள்ள லெபனானின் அடுத்த ஜனாதிபதி பதவிக்கு, இராணுவத் தளபதி மிச்செல் சுலைமானின் பெயரை, அரேபிய லீக் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டாகப் பரிந்துரை செய்துள்ளார்கள்.

எகிப்திய தலைநகரான கெய்ரோவில் நடைபெற்ற அரேபிய லீக் வெளிவிவகார அமைச்சர்களின் ஆலோசனைக் கூட்டத்தில் இதற்கான உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

மேற்கத்தேய நாடுகளின் ஆதரவிலான அரசுக்கும் சிரியா, ஈரான் ஆகிய நாடுகளின் ஆதரவிலான எதிர்க்கட்சிக்குமிடையிலான பிணக்குகளால் நவம்பர் 23 ஆம் திகதி முதல் ஜனாதிபதியின்றி, லெபனான் இயங்கி வருகின்றது.

ஜனாதிபதி ஒருவரை தேர்ந்தெடுப்பதற்கான நாடாளுமன்ற அமர்வு 11ஆவது தடவையாக டிசம்பர் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த அமர்வு ஜனவரி 12ஆம் திகதி ஆரம்பமாகும் எனத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

மிச்செல் சுலைமானை ஜனாதிபதி வேட்பாளராக இதயபூர்வமாக அரேபிய லீக் வெளிவிவகார அமைச்சர்கள் பரிந்துரை செய்கிறார்கள். உடனடியாகத் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென ஆலோசனைக் கூட்டத்தின் இறுதியில் லீக் செயலாளர் அமர் மூஸா தெரிவித்துள்ளார்.

லெபனானிய எதிர்க்கட்சியை ஆதரிக்கும் ஹிஸ்புல்லா அமைப்பும் இந்த யோசனைக்கு ஆதரவு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தீர்வுத் திட்டம் என்று எதையாவது அறிவித்தால் இந்த அரசைக் கவிழ்த்து வீட்டுக்கு அனுப்புவோம்

## ஜே.வி.பியின் விமல் வீரவன்ஸ கடும் எச்சரிக்கை

கொழும்பு,ஜன.07

இலங்கை சுதந்திரதினமான பெப்ரவரி 04ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் அதிகாரப் பரவலாக்கல் திட்டம் என்ற பெயரில் ஏதேனும் யோசனையை முன்வைத்து இந்தியத் தலைவர்களையும், சர்வதேச சமூகத்தையும் திருப்திப்படுத்த அரசு முயற்சிக்குமானால் ஏப்ரல் மாதம் தமிழ் - சிங்களப் புத்தாண்டு தினத்துக்கு முன்னர் தேசப்பற்றாளர்களுடன் இணைந்து இந்த அரசைக் கவிழ்ப்போம்.

இவ்வாறு அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ எம்.பி.

கொழும்பு தேசிய நூலக ஆவணமாக்கல் சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற - தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் - ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் யோசனைத் திட்டம் பெப்ரவரி 04ஆம் திகதி சுதந்திரதினத்துக்கு முன்னர் வெளியிடும் என்று கூறப்படுவது குறித்தே சீற்றத்துடன் கருத்து வெளியிட்டிருக்கிறார் விமல் வீரவன்ஸ.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு-

எமது படையினர் தமது உயிர்களை கொடுத்து விடுதலைப் புலிகளை பலவீனமடையச் செய்து, வன்னியையும், முல்லைத்தீவையும் மீட்கத் தயாராகின்ற வேளையில் அமைச்சர் திஸ்ஸ விதாரண போன்று மக்கள் பலமில்லாதவர்களினால் நாட்டைப் பிரிக்கும் அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை முன்வைக்க இடமளிக்க முடியாது.

அத்தோடு அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை முன்வைக்க இந்த அரசிற்கு மக்கள் ஆணை வழங்கவில்லை. எனவே, அதனை மீறும் அதிகாரம் அரசிற்குக் கிடையாது. திஸ்ஸவின் கிராம வைத்தியத்திற்கும் இங்கு இடமில்லை.

எமது இந்தக் கருத்தை மீறி பெப்ரவரி 04ஆம் திகதி தீர்வுத் திட்டத்தை அரசு முன்வைத்தால் இந்த அரசு தமிழ்- சிங்களப் புது வருட தினத்தன்று பதவியில்இருக்காது. அரசை ஆட்சியில் இருந்து மக்கள் அகற்றுவர்.

இந்தியாவைத் திருப்திப்படுத்தவே அரசு இந்தத் தீர்வுத் திட்டத்தை முன்வைக்கவிருப்பதாகக் கூறப்படுகின்றது. மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியா வேண்டுமா அல்லது ஆட்சி அதிகாரம் வேண்டுமா என்பதை அவரே தீர்மானித்துக்கொள்ளட்டும்.

போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையிலிருந்து விலகியிருப்பதற்கு நாம் வரவேற்புத் தெரிவிக்கின்றோம். ஆனால் அரசு இதனைக் காலம் கடந்துதான் செய்திருக்கின்றது. பதவிக்கு வந்த உடனேயே இந்தப் பணியை அரசு செய்திருக்கவேண்டும்.

ஏனைய விடயங்களில் இனியும் காலம் தாமதிக்கக்கூடாது. குறிப்பாக விடுதலைப் புலிகளை உடனடியாகத் தடை செய்யவேண்டும். அதன் மூலம் அவர்களின் அனைத்துலகத் தொடர்புகளைத் துண்டிக்க வேண்டும்.

அரசு போர்நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை இரத்துச் செய்ததால் அனைத்துலகத்திலிருக்கும் சதிகாரர்கள் என்ன செய்வது என்று தெரியாது தடுமாறியுள்ளனர். அவர்களுக்கு ஏமாற்றம் கிடைத்துள்ளது. எனவே அவர்கள் இனிமேலும் விடுதலைப் புலிகளைத் தொடர்புகொள்ளவிடாது தடுக்க வேண்டுமாயின் விடுதலைப் புலிகளை உடனடியாகத் தடை செய்யவேண்டும்.

இந்த ஒப்பந்தத்தை இரத்துச் செய்வதால் இலங்கைக்கு எவ்வித தீமையும் கிடைக்கப்போவதில்லை. அரசு தொடர்ந்து தனது நடவடிக்கைகளை முன்னெடுக்கலாம்.

அதேநேரம், அரசு முன் இன்னுமொரு பணியும் இருக்கிறது. கண்காணிப்புக் குழுவினருக்கு இனி இங்கு வேலை இல்லை. அவர்களையும் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற்றவேண்டும். அவர்கள் செல்லும்போது தாங்கள் கொண்டுவந்த பொருள்கள் அனைத்தையும் கொண்டு செல்கின்றனரா அல்லது அவற்றில் சிலவற்றை விடுதலைப் புலிகளுக்குக் கொடுத்துவிட்டுச் செல்கின்றனரா என்பதைப் பரிசோதனை செய்யவேண்டும்.

இனிமேல் ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது வெளிநாடுகளின் பிரதிநிதிகளோ இலங்கையின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதற்காக இலங்கை வராமல் தடுக்கும் பணியையும் அரசு மேற்கொள்ளவேண்டும் - என்றார் அவர்.(சி)

---

# போர் நிறுத்தத்தை நிராகரித்து அரசு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போர்நிறுத்த உடன்படிக்கை சட்டபூர்வமானதென உயர் நீதிமன்றம் இதுவரையில் பிரகடனப்படுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

அவ்வாறான பின்னணியில் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறுவதற்கு அரசு திடீரெனத் தீர்மானமெடுத்து அதனை ஜனவரி 03ஆம் திகதி உத்தியோகபூர்வமாக நோர்வே அரசுக்கும் அறிவித்துள்ளது.

2005 ஆம் வருடத்தில் போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறுவதாக மக்களுக்கு வாக்குறுதி வழங்கிய ராஜபக்ஷ அரசு - பின்னர் 2006 ஆம் வருடத்தில் அந்த உடன்படிக்கையின் கீழ் அரசியல் தீர்வு தொடர்பாக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக உறுதிசெய்த ராஜபக்ஷ அரசு - 03 வருடங்களின் பின்னர் போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகியது ஏன் என்பதே இன்று நாடு முழுவதிலும் எழுப்பப்படும் வினாவாகும்.

இந்தப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய பதிலொன்றை வழங்குவதற்கு அரசுக்கு இன்னமும் முடியாதுள்ளது.

ஆகவே, தமது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காக ஜே.வி.பியினதும், ஹெல உறுமயவினதும் கோரிக்கைகளுக்கு இணங்கியே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென்பது தெளிவானதாகும்.

இதன்மூலம் நாட்டின் பாதுகாப்பைப் பின்தள்ளி, தமக்குச் சாதகமானவைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பது தெளிவாகின்றது.

நாடு யுத்த ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் பாதாளத்தில் வீழ்ந்திருந்த சந்தர்ப்பத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சி அரசு போர்நிறுத்த உடன்படிக்கைக்கு முன்வந்திருந்தது.

இலங்கைப் படையினரின் பல யுத்த முகாம்கள் விடுதலைப் புலிகளின் கரங்களுக்குச் சென்றிருந்தன. கட்டுநாயக்க விமான நிலையத்திலும் விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டிருந்தனர். துறைமுகம் போன்ற பல கேந்திர ஸ்தானங்களைக் குற்றுயிராக்குவதில் விடுதலைப் புலிகள் வெற்றி கண்டிருந்தனர். நாட்டின் பொருளாதாரம் தலைகீழாக வீழ்ந்து விருத்தி வேகம் பாரியளவில் வீழ்ச்சி கண்டிருந்தது.

அவ்வாறான பின்னணியில் கையொப்பமிடப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படை நோக்கம் வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதும், நாட்டின் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாப்பதுமேயாகும். வெளிநாடுகளும் 67 சர்வதேச நிறுவனங்களும் போர்நிறுத்த உடன்படிக்கையின் ஊடாக இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கவும் அரசியல் தீர்வொன்றைக் காணவும் அதனை ஏற்றுக்கொண்டன.

இதன்மூலம் பொருளாதாரத்தை விருத்தி செய்து வாழ்க்கைச் சுமையைக் குறைத்து, நலிவுற்றிருந்த ரூபாவின் பெறுமதியை வலுவாக்க முடிந்தது. நாடு அரசியல் தன்னிறைவு கண்டது. முதலீட்டாளர்கள் பெருமளவில் வருகை தந்ததோடு புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகின. அமெரிக்கா 'மில்லேனியம் சலேஞ்' நிதிய உதவியை இலங்கைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. டோக்கியோ உதவிமாநாட்டில் 45ஆயிரம் கோடி ரூபா உதவித் தொகையை எங்களுக்கு வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

### புலிகள் மீண்டும் பேச்சுக்குவர நேர்ந்தது

வருடக்கணக்காக இருந்த ஆயுதத் தடையை நீக்கி அமெரிக்கா, இந்தியா மற்றும் பிரிட்டன் ஆகியன எங்களுக்கு யுத்தப் பயிற்சி, ஆலோசனைகள் மற்றும் ஆயுதங்களை வழங்க இணங்கியிருந்தன. பயங்கரவாத நடவடிக்கைகளை ஒடுக்கும் பொருட்டு சர்வதேச புலனாய்வுத்துறைத் தகவல்கள் எமக்குக் கிடைக்கப்பெற்றன. இதற்கான அடையாளமாக அமெரிக்காவிடமிருந்து யுத்தக் கப்பலொன்றும் இலவசமாகக் கிடைக்கப்பெற்றது.

அவ்வாறு நாட்டைப் பலப்படுத்திய அதே வேளையில் நாங்கள் அரசியல் தீர்வொன்றுக்கான பேச்சுகளை முன்னெடுத்துச் சென்றோம். ஒஸ்லோ பேச்சின்போது தனியான இராச்சியத்துக்குப் பதிலான மாற்று ஏற்பாடுகளைத் தேடுவதற்கான பேச்சுகளை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சம்மதிக்க வைக்க எம்மால் முடிந்தது.

இந்தப் போர்நிறுத்த உடன்படிக்கையால் நாட்டை ஒருங்கிணைக்கும் சூழலொன்று உருவாகியது. சிங்கள,தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கு வடக்குக்கும் தெற்கிற்கும் பயணிப்பதற்கு முடியுமானதாகவிருந்தது. சகலரிடமும் இலங்கையர் என்ற உணர்வு ஏற்பட்டது.

புலிகள் இயக்கம் இடைநடுவில் இடைக்கால அரசியல் தீர்வொன்றைத் தேடும் நோக்கில் ஏப்ரல் மாதத்தில் பேச்சு மேசையிலிருந்து வெளியேறினர்.

பேச்சு மேசையிலிருந்து வெளியேறுவதற்கு விடுதலைப்புலிகள் தீர்மானமெடுத்தாலும் சர்வதேச அழுத்தங்களின் காரணமாக மீண்டும் பேச்சுக்கு வர இணங்கவேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. 2003 ஜூலை மாதமளவில் போர்நிறுத்த உடன்படிக்கை மீறல் மிகவும் குறைவடைந்தது. ஆயினும் ஐ.தே.க. அரசு கலைக்கப்பட்டமையால் அரசியல் தீர்வுப் பாதையின் ஊடாக முன்னோக்கிச் செல்லும் அவகாசம் நெருக்கடிக்குள்ளாயிற்று.

### அரசு தனது தோளில் போட்டுள்ளது

முழுச் சர்வதேச சமூகமும் போர்நிறுத்த உடன்படிக்கை தொடர்பாகக் கவனம் செலுத்தியது. போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம் தாம் சர்வதேச வலைப்பின்னலில் மாட்டிக்கொண்டுவிட்டனர் என விடுதலைப் புலிகள் பல சந்தர்ப்பங்களில் தெரிவித்தனர்.

இதற்கு முன்னர் இலங்கை அரசுடன் ஏற்படுத்திக்கொண்ட போர்நிறுத்த உடன்படிக்கைகளிலிருந்து புலிகள் இலகுவாகத் தூர விலகினாலும், இந்தப் போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகுவதற்கு விடுதலைப் புலிகளால் முடியாமற் போனது. அவர்களுக்கு சமாதானத் தீர்வொன்று தேவையற்றதெனக்கூற முடியாமல், சர்வதேச ரீதியில் பாரிய அழுத்தங்களுக்கு அவர்கள் முகங்கொடுக்கவேண்டி ஏற்பட்டது.

தற்போது போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறும் பொறுப்பை இலங்கை அரசு தனது தோள்களில் போட்டுக்கொண்டுள்ளது. இதனால் இலங்கைக்கு எஞ்சியிருப்பது சர்வதேச வெறுப்பேயாகும்.

சர்வதேச ரீதியில் ஏற்கனவே இத்தீர்மானம் கண்டனங்களுக்கு உள்ளாகியுள்ளது. அமெரிக்கா, ஜப்பான், இந்தியா போன்ற நேச நாடுகள் போலவே ஐக்கிய நாடுகள் அமைப்பும் கண்டனங்களைத் தெரிவித்துள்ளது. உதவி வழங்கும் நாடுகளின் கருத்துகளும் அதுவே.

அதிகாரத்தைப் பகிரும் தீர்வொன்றை முன்வைப்பதாக சர்வதேச சமூகத்துக்குப் பல சந்தர்ப்பங்களில் வா[illegible] பின்னர் மஹிந்த அரசு இம்முடிவுக்கு வந்திருப்பது அந்தக் கண்டனங்கள் மென்மேலும் அதிகரிக்கக் காரணமாகும்.

வெளிநாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் இலங்கை மீது வைத்திருந்த நம்பிக்கை இறுதியில் இலங்கை அரசினாலேயே உடைக்கப்பட்டுள்ளது.இதன் விளைவாக சர்வதேச உதவிகள் நாட்டுக்குக் கிடைக்காமற் போவதுடன், இலங்கை தொடர்பாகச் செயற்பட்ட - அந்த நாடுகளிலிருந்த - சக்தியும் சீர்குலைந்துவிடும்.

### சர்வதேச மட்டத்தில் புலிகள் பலமடைவர்

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து வெளியேறுவதோடு சிவில் யுத்தமொன்று நடைபெறும் அபாயகரமான நாடு இதுவென சில நாடுகள் இலங்கையை மீண்டும் வகைப்படுத்திக் கொள்ளும்.

எங்களுக்குக் கிடைக்கும் உதவிகள் குறைவடைந்து முதலீட்டாளர்களின் வருகை முடிவடையும். வந்துள்ள முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவர். யுத்த உதவிகள் மற்றும் உபகரணங்கள் விநியோகித்தல் குறையும். இதன் ஒட்டுமொத்த விளைவு, சர்வதேச மட்டத்தில் இலங்கை பலமிழந்துவிடுவது மாத்திரமல்லாது விடுதலைப் புலிகள் இயக்கம் சர்வதேச மட்டத்தில் பலமடைவதுமாக இருக்கும்.

அது மாத்திரமல்ல. உண்மை மேலும் பயங்கரமானது.

ஏனைய நாடுகளின் போர் நிறுத்த உடன்படிக்கைகயைப் போலில்லாமல் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட போர் நிறுத்த உடன்படிக்கை விசேடமானது. வேறு நாடுகளில் இவ்வாறான உடன்படிக்கைகளை ஏற்படுத்தும்போது போர் புரியும் இரு தரப்பினரதும் இராணுவமும் ஒரே மட்டத்தில் கருதப்படும். ஆயினும்,இந்த உடன்படிக்கையில் 1.3பிரிவுக்கிணங்க இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டைப்பாதுகாக்கும் முதல்தர உரிமை இலங்கைப் படையினருக்கு உரித்தாயிருந்தது. இந்த உரிமை இலங்கை அரசுக்கு உரியது என்று விடுதலைப் புலிகளால் போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

போர் நிறுத்த உடன்டிக்கையை அடிப்படையாகக் கொண்டே பேச்சுக்குச் சென்றபோது விடுதலைப் புலிகள் இயக்கமும் இலங்கைப்படையினரது உரிமையை ஏற்றுச் செயற்படும் வாய்ப்பு ஏற்பட்டது.

வெளிநாட்டு அமைச்சரும் ஊடக அமைச்சரும் கூறும் வகையில் போர்நிறுத்த உடன்படிக்கை இல்லாது மீண்டும் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தயாராகவுள்ளார். இது மாறுபட்ட வகையிலேயே அமையும். பேச்சு மேசையில் இலங்கைப் படைகளை உயர்மட்டத்தில் ஏற்றுக்கொள்ளும் தேவை தற்போது அரசினாலேயே இல்லாமற் செய்யப்பட்டுள்ளது.

### யூகோஸ்லாவியாவில் [illegible] நிலைமையை [illegible]

எனவே, எதிர்காலத்தில் [illegible]நச சமூகமும் விடுதலைப் புலிகள் இய[illegible]ம் இலங்கைப் படையினரின் மேலான[illegible]மையை ஏற்றுக்கொள்வதற்கான தே[illegible]ல்லை. தற்போது தோன்றியிருப்பது [illegible] யூகோஸ்லாவியாவில் ஏற்பட்ட நிலை[illegible]ய. எதிர்காலத்தில் இலங்கை இராணுவத்தையும் விடுதலைப் புலிகளின் இராணுவத்தையும் சமமான நிலையில் கருதும் வகையிலேயே [illegible] செல்லவேண்டியிருக்கும். இது மிகவும் பாரதூரமானதோர் நிலையாகும். இந்தப் பயங்கர [illegible] இலங்கை அரசாலேயே ஏற்படுத்திக்கொள்ளப்பட்டுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகிக்கொள்வதன் மூலம் தேசிய ரீதியில் நாம் பெற்றுக்கொள்வது எதுவுமில்லை. இலங்கை இராணுவத்தை ஏற்றுக்கொள்ளும் நிலை அரசினாலேயே மறுக்கப்பட்டமையால் இராணுவத் துக்கிருந்த சாதகமான நிலையும் சக்தியும் இல்லாமற் போகும் சூழல் ஏற்பட்டிருக்கின்றது.

போர்நிறுத்த உடன்படிக்கையின் மூலம் அரசியல் தீர்வை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்ததோடு மக்கள் மத்தியில் நிலவிய இலங்கையின் அன்னியோன்யம் தொடர்பான நம்பிக்கை இத்தீர்மானத்தின் மூலம் சிதறுண்டு போயுள்ளது.

சர்வதேச மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் மட்டுமல்லாது பேச்சு மேசையிலும் எம்மை இழிநிலைக்கு ஆளாக்கிய இவ்வாறான - தூரநோக்கற்ற - தீர்மானத்தின் மூலம் சாதகநிலை, தனியான இராச்சியத்தை எதிர்பார்க்கும் - அரசின் மூலம் பலமடைந்த - விடுதலைப் புலிகள் அமைப்புக்கே கிடைத்தது. நாட்டுக்கோ மக்களுக்கோ இந்தத் தீர்மானத்தினால் எந்தவொரு பலனும் இல்லை. தனியான இராச்சியமொன்றுக்கான - விடுதலைப் புலிகள் அமைப்புக்குச் சர்வதேச பலனுள்ள - சூழலொன்றை ஏற்படுத்திக் கொடுத்த இச்செய்கைக்கு அரசே பொறுப்புக்கூறவேண்டும்.

யுத்த வெறியிலும் இரத்தத்திலும் மூழ்கியுள்ள இந்த ஆட்சியாளர்களின் யதார்த்தத்தை உணர்ந்துகொள்ள முடியாது.

### அரசு அரசியல் தீர்வை எவ்வாறு காணப்போகிறது?

பயங்கரவாதத்திற்கு பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதோடு ஒவ்வொரு மக்கள் பிரிவினருக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றின் மூலம் இந்த நாட்டுக்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவேண்டுமென்பது ஐக்கிய தேசியக் கட்சியின் நம்பிக்கையாகும். பயங்கரவாதத்தை ஜனநாயகத்தின் மூலமே தோற்கடிக்க வேண்டுமென்பதே எமது நோக்கம். வைரத்தை வைரத்தாலும், பயங்கரவாதத்தை பயங்கரவாதத்தாலும் வெல்ல முடியாதென்பது 2550 வருடங்களுக்கு முன்னரே புத்த பகவானால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினைக்கான தீர்வு பேச்சு மூலமும் இணக்கத்தின் மூலமும் காணப்படவேண்டும். உலகின் சகல நாடுகளிலும் இவ்வாறான பிணக்குகள் இவ்வகையாகவே தீர்த்துவைக்கப்பட்டுள்ளன. அவ்வாறான தீர்வொன்றுக்கு எமது உதவியை வழங்குவதற்கு நாம் ஆயத்தமாகவுள்ளோம்.

ஆயினும், தங்களது அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நாட்டின் எதிர்காலத்தைப் பாழாக்கும் ஒரு சாராரின் இத்தகைய தீர்மானம் குறித்து நாம் மௌனமாக இருக்க முடியாது. இத்தீர்மானம் விடுதலைப் புலிகளுக்குத் தனியான இராச்சியத்தை வழங்குவதற் கான நடவடிக்கையாகியுள்ளது.

முழு நாடும், மக்களும், நாட்டின் எதிர்காலமும் மிகவும் பயங்கரமான மற்றும் பாதகமான நிலைக்கு ஆளாகும் வகையில் போர்நிறுத்த உடன்படிக்கையை ரத்துச்செய்தது ஏன்?

இப்படியான பாதகமான நிலையில் இருந்து கொண்டா அரசு அரசியல் தீர்வைத் தேடப் போகின்றது?

இந்தப் பாரதூரமான பிரச்சினைக்கு, தெளிவான பதிலளிக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் ஒருதலைப்பட்ச முடிவு போர்ப் பிரகடனம் எனக் கண்டனம்

புதுச்சேரி,ஜன.07

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தலிருந்து ஒரு தலைப்பட்சமாக விலகுவதாக அறிவித்திருக்கும் இலங்கை அரசின் நடவடிக்கை கடும் கண்டனத்துக்குரியது என்று விசனித்துள்ளது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி.

புதுச்சேரியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் ராஜா மேற்கண்டவாறு விசனம் தெரிவித்தார்.

''இலங்கையில் ஏற்பட்டிருக்கும் நிகழ்கால சூழல் கவலையளிப்பதாகவே உள்ளது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவது போர்ப்பிரகடனத்துக்குச் சமம். இது சரியான நடவடிக்கையல்ல.

''தாக்குதல்கள் அதிகரித்தால் ஈழத்தமிழ் மக்களின் துயரங்களும் அதிகரிக்கும். இலங்கை அரசின் நடவடிக்கை கடும் கண்டனத்துக்குரியது.

''இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வே சரியானது. இராணுவத் தாக்குதல் மூலம் தீர்வுகாண முடியும் என இலங்கை அரசு தீர்மானித்தால் அது சரியான தெரிவு அல்ல. அமைதியான முறையில் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டும்'' - என்றார் ராஜா.

கடந்த ஆறு வருடகாலமாக நடைமுறையில் இருந்த யுத்தநிறுத்த ஒப்பந்தத்திலிருந்து ஒருதலைப்பட்சமாக விலகியதாக இலங்கை அரசு அறிவித்திருக்கும் நிலையில் -

அரசியல் தீர்வுக்கான வாய்ப்பு இதன்மூலம் சிதைந்து, போர் மூலமான தீர்வே ஒரே தெரிவு என புலிகளும், இலங்கை அரசும் தெரிவிக்கும் நிலையில் -

இந்திய மத்திய அரசுக்கு ஆதரவு அளித்து வரும் இடதுசாரிக் கட்சிகளில் ஒன்றான இந்திய கம்யூனிஸ்ட் கட்சியிடமிருந்து இந்தத் தருணத்தில் இந்த வலியுறுத்தல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(சி)

# ஓமந்தை ஊடான போக்குவரத்து தொடரும் எனச் செஞ்சிலுவை நம்பிக்கை

கொழும்பு, ஜன. 07

போர்நிறுத்த உடன்படிக்கை முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ள போதிலும் ஓமந்தை ஊடான - வன்னிக்கான - போக்குவரத்து நடவடிக்கைகளில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என செஞ்சிலுவை சர்வதேசக் குழு நம்பிக்கை தெரிவித்திருக்கிறது.

இவ்விடயம் தொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பதில் பேச்சாளர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

ஓமந்தைப் பிரதேசத்தில் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருக்கும் எமது பணியாளர்களின் பாதுகாப்புக்கு அரசும் மற்றும் விடுதலைப் புலிகள் உத்தரவாதம் வழங்கியுள்ளனர்.

பணியாளர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது மாத்திரமே செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற்பாடுகளை இடைநிறுத்த வேண்டி ஏற்படும்.

போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் செயற்பாடுகளுக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது.

போர்நிறுத்த ஒப்பந்தம் இல்லாத வேளையிலும் கூட செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு இந்தப் பகுதிகளில் செயற்பட்டுள்ளது.

இரு தரப்பினரும் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கும் வரை ஓமந்தைப் பாதை ஊடான போக்குவரத்து நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற ஒத்துழைப்பு வழங்குவோம். - என்றார்.

(சி)

# இலங்கை பின்நோக்கிச் செல்லும் என்று எச்சரிக்கிறது ஆஸ்திரேலியா

மெல்போர்ண், ஜன.07

போர்நிறுத்த ஒப்பந்தத்திலிருந்து ஒரு தலைப்பட்சமாக விலகுவதன் மூலம் இலங்கை பின்நோக்கிச் செல்வதாக ஆஸதிரேலியா எச்சரித்துள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகுவதன் மூலம் இலங்கை பின்னோக்கிச் செல்கிறது என ஆஸ்திரேலியா எச்சரித்துள்ளது.

அவுஸ்திரேலியப் பிரதமர் ஸ்டிபன் ஸ்மித் இவ்விடயம் குறித்துக் கவலை வெளியிட்டுள்ளார்.

இது ஒரு பின்னோக்கிச் செல்லும் நடவடிக்கையெனவும் இதனால் பொதுமக்களுக்கு எதிரான வன்முறைகள் மேலும் அதிகரிக்கலாம் என்றும் ஆஸ்திரேலியா அச்சம் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பையும் இலங்கையின் சகலரினது மனித உரிமைகளையும் பாதுகாக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

**சிறந்த செயற்பாடாக அமையாது**

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை ஒரு சிறந்த செயற்பாடாக அமையாது என்றும் குறிப்பிட்டுள்ள அவர், இலங்கையின் இன முரண்பாட்டிற்கு இராணுவத் தீர்வைக் காண முடியாது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பேச்சு மூலமான தீர்வே நிரந்தர சமாதானத்தைக் கொண்டுவரும் எனக் குறிப்பிட்டுள்ள அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டிபன் ஸ்மித், சகல தரப்பையும், ஜனநாயக நடைமுறைகளையும் சட்டத்தின் ஆட்சியையும் மதிக்குமாறும் சகல இலங்கையர்களினதும் அபிலாஷைகளையும் நிறைவேற்றும் அரசியல் தீர்விற்காக முயற்சி செய்யுமாறும் கேட்டுள்ளார்.

(அ-உ)

## கைதான ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கம் தனியார் வகுப்புக்களை நடத்தி இயன்றவரை தனது குடும்பத்தி னரை காப்பாற்றி வந்தார்.

குடும்பப் பொறுப் புக்களையும் சுமந்து தனது கல்வியை யும் தொடர்ந்து சுயமாக முன்னேறிய மாணவன் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் பிரபல தனியார் கல்வி நிலையம் ஒன்றில் இணைந்த கணித ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த மாணவனை காலம் தாழ்த்தாது உடன்விடுவிக்க வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறோம். இவரின் விடுதலைக்காக உரிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(7ஆம் பக்கமும் பார்க்கவும்)


2010 A/L CHEMISTRY Group Class
செவ் 4.50 Pm (08.01.2008)
DIAS Bsc (Hons)
GENERAL
College at Chemistry
32, Palam Rd, Kantharmadam.

உடன் தேவை
எமது நிறுவனத்திற்கு அலுவலகஉதவியாளர் (CLERK) தேவை. நேரில் வரவும்.
நாவலர்
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

SUBRA சித்தங்கேணி
A/L DAY CLASS

Arts
Tam - குழந்தை; Log - E.S.பவன்; H.c - சந்திரன்; Dra - கணேஸ்; P.Sc - அசோக்
Geo - ஐங்கரன்; Ag - அமுதன்; His - குமார்; Cri - அன்டனி
09 - 01 - 2008 7 am புதன்
Com
B.St - நந்திஸ்; Acc - சபேசன் - சீலன்; E.C - ஜெயக்குமார் - S.S சிறி
Maths - Bio
C.Mat - குணம்; Phy - சன்; Che - பிரதீபன்; Bio - கஜன், சுரேன்
கடந்த கால பெறுபேற்றை அறிந்து பாருங்கள் திறமையானவரை நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.
Spoken English by BRITTO புதிய பிரிவுகள் காலை 10.00
செவ்வாய் 08 - 01 - 2008 செவ்வாய்
Spoken Sinhala by PROF லீலாகிருஷ்ணன் புதிய பிரிவுகள் காலை 9.00
அரச அலுவலர்களுக்கான புதிய சிங்கள வகுப்பு 12.01.2008 காலை 6.15
15 மாணவர்கள் மட்டும் அனுமதி.


## ராஜாப்டீன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் நாளை நாடாளுமன்றம் கூடும் போது பதவியேற்றுக்கொள்வார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க. பட்டியலில் அடுத்தபடியாக கூடுதல் விருப்பு வாக்குகளைப் பெற்றிருந்த ராஜாப்டீன், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினராவார்.

இவர் தற்சமயம் மேல்மாகாண சபை உறுப்பினராக இருந்துவருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

(சி)

## புலிகளின் மீதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் இயக்கம் தொடர்ந்தும் தலைநகரில் வன்செயல்களில் ஈடுபட்டுவருவதனையும் அரசுடன் இணைந்து செயற்படும் கட்சிகளின் அழுத்தங்களையும் கவனத்திற் கொண்டு, அரசு இந்தத் தடையை மீளவும் விதிப்பதற்கு ஆலோசிக்கின்றது.

- இவ்வாறு அந்த வார இதழ் மேலும் தெரிவித்திருந்தது. (சி)

## மன்மோகன் சிங் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மோகன் சிங்கின் நிகழ்ச்சி நிரல் இடமளிக்கவில்லை என இந்தியா தெரிவித்துள்ளதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் தொடர்பாடல்களுக்கான பணிப்பாளர் நாயகம் ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமரின் நிகழ்ச்சிநிரல் தொடர்பான விடயமே இது. வேறு ஏதாவது திகதிகளில் அவரால் இலங்கைக்கு வருகை தர முடியுமா என நாங்கள் ஆராயவேண்டியுள்ளது என ஆரியசிங்க மேலும் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், 2008 இல் இலங்கைக்கு இருதரப்பு விஜயமொன்றை மேற்கொள்வதென்ற பிரதமர் மன்மோகன் சிங்கின் உறுதிப்பாடு தொடர்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் 60ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் கலந்துகொள்ளுமாறு இந்தியப் பிரதமருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் கடந்த வாரம் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம இந்தியப் பிரதமர் பெப்ரவரியிலேயோ அல்லது வேறு எந்தக் குறிப்பிட்ட மாதத்திலேயோ விஜயம் மேற்கொள்ள வேண்டும் எனத் தாங்கள் எதிர்பார்க்கவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

''கடந்த 20 வருட காலப்பகுதியில் இந்தியப் பிரதமர் எவரும் இருதரப்பு விஜயத்தை மேற்கொள்ளாததால், இப்போது மன்மோகன் சிங் விஜயம் மேற்கொள்ள வேண்டுமென எதிர்பார்க்கிலோம்''-என்றும் வெளிவிவகார அமைச்சர் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, இலங்கையில் தொடரும் வன்முறைகள், விடுதலைப் புலிகளுடனான யுத்த நிறுத்த உடன்படிக்கையிலிருந்து இலங்கை அரசு ஒருதலைப்பட்சமாக விலகியமை, இனப்பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டமொன்றை முன்வைக்காமல் அரசுத் தரப்பு இழுத்தடிக்கின்றமை போன்றவை குறித்து இந்தியா அதிருப்தியடைந்துள்ளமையே மன்மோகன் சிங்கின் விஜயம் இப்போது தவிர்க்கப்பட்டமைக்கான காரணம் என அரசியல் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

பிரதமர் மன்மோகன் சிங் விஜயம் மேற்கொள்ளும் பட்சத்தில் அது இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக இலங்கை அரசின் கடுமையான நிலைப்பாட்டை இந்தியா ஆதரிப்பதாகவும் ஊக்குவிப்பதாகவும் அர்த்தப்படுத்தப்பட்டுவிடலாம் என இந்தியா கருதியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (சி)

## தனபால பதவி விலகினார்

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் 2005 டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் அவரது விசேட ஆலோசகராக நியமிக்கப்பட்ட ஜயந்த தனபால, தனது தனிப்பட்ட காரணங்களுக்காக அப்பதவியிலிருந்து விலகுகின்றார் என்று இப்போது அறிவித்திருக்கின்றார். (சி)

## இனப்பிரச்சனை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெளிவாகும். அவ்வாறு செய்வதன் மூலமே அவர்கள் இலங்கை விவகாரத்தைச் சரியாகப் புரிந்துகொண்டு, தமக்கென ஒருநிலைப்பாட்டை மேற்கொண்டு இதில் அக்கறை கொள்வார்கள் - என்று வே.பால குமாரன் தமது பேட்டியில் குறிப்பிட்டதாக பி.ரி.ஐ. மேலும் தெரிவித்திருக்கின்றது. (அ)

## கொட்டடி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத் தினார். இராணுவத் தரப்பினர் விசாரணையின்போது தெரிவித்தவையாவது:-

எமக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் வீடு ஒன்றைச் சுற்றிவளைத்தபோது, அங்கு குண்டுவெடிப்பு இடம்பெற்றது.

வீட்டுக்குள் இருந்த இளைஞர் ஒருவரின் குண்டை வெடிக்கவைத்ததால் அவரின் உடல் சிதைந்து கிடக்கக் காணப்பட்டது. சம்பவத்தில் இரு படையினரும் காயமடைந்தனர்.

தற்கொலைத் தாக்குதல் அங்கியின் பாகங்கள், ரி 56 ரக துப்பாக்கி, 5 கிரனேட்டுக்கள், பிஸ்கட், உடுபுடைவைகள் மற்றும் பொருள்களை நாம் அங்கிருந்து மீட்டுள்ளோம்.

இளைஞர் ஒருவரின் சிதைவடைந்த சடலத்தையும் மற்றுமொருவரின் சடலத்தையும் மீட்டுள்ளோம் - என்று தெரிவித்தனர்.

சடலங்களை யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கும்படியும் சம்பவ இடத்தில் மீட்கப்பட்டவை என்று படையினர் தெரிவித்த கிரனேட்டுகளை செயலிழக்கச் செய்யுமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (அ-1-15)

## புலிகளின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீரச்சாவடைந்தனர் என வன்னியில் புலிகள் தெரிவித்தனர்.

எனினும், சார்ள்ஸ் கிளைமோர்த்தாக்குதலில் கொல்லப்பட்டார் என்பதை மறுத்திருக்கும் படைத்தரப்பு, அவர் மன்னார் முன்னரங்க நிலைகள் மீது இராணுவம் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார் என அறிவித்திருக்கின்றது.

வழமைபோல் தனது படைப்பிரிவைச் சந்தித்துவிட்டு அதைப் பார்வையிட்ட பின்னர் - 'ஹயஸ்' ரக வானில் இலுப்பைக் கடவை - பாலமடுப் பகுதியில் திரும்பிக் கொண்டிருந்த சமயமே சனிக்கிழமை பிற்பகல் 3.10 மணியளவில் கிளைமோர் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்று அதில் சிக்கி கேணல் சார்ள்ஸ் பலியானார் என 'தமிழ் நெற்' இணையத்தளம் புலிகளை மேற்கோள் காட்டிச் செய்திவெளியிட்டிருக்கின்றது.

சார்ள்ஸுடன் (சண்முகநாதன் ரவிசங்கர் - யாழ்ப்பாணம்), லெப்டினன்களான சுகந்தன் (சிவபாலன் ஸ்ரீதரன் - ஜெயபுரம்), வீரமறவன் (பரராஜசிங்கம் சுதன் - மல்லாவி) மற்றும் கலா (சின்னத்தம்பி கங்காதரன் - வடமராட்சி) ஆகியோரும் கொல்லப்பட்டனர் என அறிவிக்கப்படுகின்றது.

கேணல் சார்ள்ஸ், கடந்த 85ஆம் ஆண்டு புலிகள் இயக்கத்தில் இணைந்து இந்திய இராணுவத்துடனான மோதலில் சிறந்த பங்காற்றினார். அதைத் தொடர்ந்து புலிகளின் புலனாய்வுத் துறைக்குள் உள்ளீர்க்கப்பட்டார்.

பல தாக்குதல்களுக்கு கட்டளைத் தளபதியாகப் பணியாற்றியிருந்த இவர், தலைவர் பிரபாகரனால் 2004ஆம் ஆண்டு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட இராணுவப் புலனாய்வுத்துறையின் தலைவராக நியமிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(சி)


ENGLISH MEDIUM A/L
Commences on 09.01.2008
WED - 4Pm.

| | |
|---|---|
| CHEMISTRY DIAS Bsc (Hons) | PHYSICS SASI Bsc |
| BIOLOGY SHUREN Msc | COM.MATHS AHILAN (Hons) |

32, Palam Rd, Kantharmadam
College at Chemistry

S.I.A.S பரீட்சை
விசேட வழிகாட்டல் வகுப்பு
பிரிவு II ஆரம்பம் செவ்வாய் 2.15 - 4.30
பிரிவு II சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 - 2 மணிவரை நடைபெறுகின்றது.
வகுப்புக்கள் வாரநாள்களில் 2.15 - 4.30 மணிவரை நடைபெறும்.
குறிப்பு:- 19ஆம், 20ஆம் திகதிகளில் பரீட்சை நடைபெறவுள்ளது.
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org